# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 115 இதழ்: 13 31-3-1989 (மார்ச் 31 — ஏப்ரல் 7) ரூபா 1-50 இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு


## சிறுகதை

பத்திரிகைக்கு சிறுகதைகளை எழுதி அனுப்புங்கள். தரம் கண்டு பிரசுரிப்போம். படிப்பினை ஊட்டுபவையாக, சிந்தனையைத் தூண்டுபவையாக, சமூக சீர்கேடுகளைப் படம்பிடித்துக்காட்டுபவையாக, அல்லது, புரட்சிக் கருத்துக்களைக் கொண்டவையாக அமையலாம். பிரசுரிக்கப்படாதவை திருப்பி அனுப்பப்பட மாட்டா. பிரசுரிக்கப்படும் கதைகளுக்கு நன்கொடையாக ரூபா 25/= வழங்கப்படும்.

### முனிவரைப் புனிதராக்கத் தேவையான புதுமை நிறைவேற விசுவாசிகளை மன்றுடும்படி அழைப்பு:

# யோசவ் வாஸ் முனிவர் தினத்தில்

# பதுளையில் சிறுவர் கலைக்கண்காட்சி

**ஏப்ரல் 4ஆம் திகதி உரோமாபுரியில் உத்தியோக பூர்வமாக 'ஆசாரத்துக்குரியவர்' என அறிக்கையிடப்படவிருக்கும் வந்தனைக்குரிய யோசவ் வாஸ் முனிவர் விரைவில் முத்திப்பேறுபெற்ற பட்டம் பெறவேண்டுமென்று நாடெங்கும் செபமுயற்சிகளும் ஊக்குவிப்பு முயற்சிகளும் நடைபெறுகின்றன. பதுளைப்பங்கில் இதையொட்டி ஒருவார சிறுவர் ஓவியக் கண்காட்சி இடம்பெற்றது.**

இலங்கையின் அப்போஸ்தலரான யோசவ் வாஸ் முனிவரின் முத்திப்பேறு குறித்து நாடெங்கும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. பதுளை மரியன்னை பேராலயத்தின் பங்குக் குரு சிறுவரின் துணையுடன் இதைச் செய்து வருகிறார்.

இதையொட்டி ஒரு வாரமாக சிறுவரின் ஓவியக் கண்காட்சியொன்று இடம் பெற்றது. யோசவ் வாஸ் முனிவரின் வாழ்வு, பணி, அவரது காலப் பின்னணி ஆகியவற்றை இந்த ஓவியங்கள் சித்தரித்தன.

பங்குக் கோயிலில் ஒன்றுகூடி யோசவ் வாஸ் முனிவரைப்பற்றிய கதைகளைக் கேட்டபின் சிறுவர்கள் தமது எண்ணங்களை ஓவியமாகத் தீட்டினர். சிறந்த ஓவியங்களுக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன. கதை, சொற்பொழிவுகளுக்கும் பரிசுகள் அளிக்கப்பட்டன.

யோசவ் வாஸ் முனிவர் தேசிய செயலகத்திற்குப் பொறுப்பாக இருக்கும் கண்டி ஆயர் மேதகு வியானி பெர்னாண்டோ வத்திக்கானிலுள்ள, புனிதர் பற்றிய விசாரணைகளை மேற்கொள்ளும் சபையானது முனிவர் மேலான புண்ணியங்களையுடையவர் என்பதை ஏகமனதாக ஏற்றுக்கொண்டதென்றும் ஏப்ரல் 4-ல் அவரை ஆசாரத்துக்குரியவர் என அறிக்கையிடுகிறதென்றும்கூறி அவருக்கு விரைவில் முத்திப்பேறு பெற்ற பட்டம் கிடைக்கும்படி மன்றுடும்படியும் கேட்டுள்ளார்.

தற்போது இனப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் சிங்களவர், தமிழர் ஆகிய இரு சாராருக்கும் பணிபுரிந்தவரான யோசவ் வாஸ் முனிவருக்கு முத்திப்பேறு பெற்ற பட்டம் கிடைப்பது இன்றைய சூழ்நிலையில் நன்மையானதாக இருக்குமென நம்பப்படுகிறது. இலங்கை ஆயர் மன்றம் முனிவருக்குப் புனிதர் பட்டம் கிடைக்க நாட்டில் சமாதானம் என்ற புதுமை நடைபெற இறைவனை மன்றுடும்படி விசுவாசிகள் அனைவரையும் கேட்டுள்ளது.

## சிறுபான்மையினருக்கு பூரண உரிமை

பாகிஸ்தான் அரசு சிறுபான்மை சமூகங்களின் உரிமைகளைப்பாதுகாக்கவும், அனைத்து மக்களுக்கும் நீதிவழங்கவும் உறுதிசெய்துள்ளது.

சிந்து மாவட்ட தகவல், போக்குவரத்து அமைச்சர் அகமத் ஷா ஜனவரி 12 ஆம் திகதி தமக்களிக்கப்பட்ட ஒரு விருந்தின்போது இவ்வாறு கூறினர்.

சிறுபான்மையினரின் நிலபுலன்கள் மீதுள்ள ஆக்கிரமிப்பு நீக்கப்படுமென்றும் தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள மக்கள் கட்சி அரசாங்கத்தை ஆதரிக்குமாறும் கேட்டுக் கொண்டார்.

## கொத்தடிமைகளுக்கு மீட்பு

கல்வியறிவில்லாத காரணத்தால் கைநாட்டு இட்டு கடன் வாங்கிய பலர் அதற்காக வாழ்நாள் முழுவதும் உழைக்க வேண்டிய நிலை இந்தியாவின் சில பாகங்களில் இன்னும் இருந்துவருகிறது.

இவ்வாறு ஏமாற்றப்பட்ட தொழிலாளர்கள் தமது கடன் எவ்வளவென்பதையே அறியாமல் வருடக்கணக்காக உழைக்கவேண்டியிருக்கிறது. இந்தத் தீங்கு பீகார், மத்திய பிரதேசம், உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரா ஆகிய இடங்களில் மிகுதியாகக் காணப்படுகிறது.

இத்தொழிலாளரின் நலனுக்காக சிரஞ்சீவி சங்கதானத்தின் மூலம் உழைத்துவரும் விவேக் பண்டிற் மகாராஷ்டிராவின் ஒரு மாவட்டத்திலுள்ள 5000 தொழிலாளரில் 2600 பேருக்கு விடுதலை பெற்றுக் கொடுத்துள்ளார்.

பம்பாய் மறைமாவட்டத்தின் வெளியீடு ஒன்றில் இது பற்றி ஆராய்ந்துள்ள திரு. அல்வின் லோப்பஸ் ரூ.500/- ரூ. 700/-கடன்வாங்கியவர்கள் கூட வாழ்நாள் முழுவதும் உழைப்பதோடு பல இன்னல்களுக்கும் கொடுமைகளுக்கும் ஆளாக வேண்டியிருக்கிறது. எனக் கூறுகிறார்.



பொதுநிலையினரின் ஆணைக் குழுவால் நடத்தப்பட்ட சுவரொட்டி, கவிதைப் போட்டிக்கான பரிசில்களைப் பெற்றவர்களுடன் யாழ். ஆயரும், ஆணைக்குழு தலைவரும், மறைவட்ட முதல்வரும், பொதுநிலைய ஆணைக்குழுவினரும் இணைந்து நிற்பதைக் காணலாம்.

## பூகம்ப நிவாரண நிதி

கேரளத் திருச்சபைகள் சங்கமும், இந்திய ஒத்தடொக்ஸ் சீரிய திருச்சபையும ஆர்மேனியாவில் பூகம்பத்தினால் ஏற்பட்ட பெரும் அழிவுகளையிட்டு ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளன.

நிவாரணப்பணிக்காக கேரளத் திருச்சபைகள் சங்கம் ரூ1001/— அளிக்கத் தீர்மானித்துள்ளது. இந்திய ஒத்தடொக்ஸ் சீரிய திருச்சபை ரூ.1,00, 000/- வும் மத்திய கேரள மாவட்ட தென்னிந்தியதிருச்சபை ரூ.10000/-வும் நிவாரண நிதிக்கு அளித்துள்ளன. கத்தோலிக்க ஆயர் பேரவை ஜனவரி 16-ம் திகதியன்று 2,00,000/- ரூபாவை நிவாரண நிதிக்கு அளித்துள்ளது.

## யாழ். கத். ஆசிரியர்கள் சங்கம் நடாத்திய கிளை மட்டத்திலான போட்டி முடிவுகள்

பேச்சுப்போட்டி கடந்த 11—03—1989 சனிக்கிழமை யா/புனிதர் சாள்ஸ் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. மறைஇயக்குனர் அருள்திரு R. M. G. நேசநாயகம் அடிகளாரின் ஆசியுரையுடன் போட்டிகள் ஆரம்பமானது. இப்போட்டிகளின் முடிவுகள் பின்வருமாறு.

**1—ம் பிரிவு**

1-ம் இடம் செல்வன் பி. மக்சிமன் யா/புனிதர் சாள்ஸ். ம. வி.
2-ம் இடம் செல்வன் யே. மதியழகன் யா/புனிதர் யேம்ஸ். ம. வி
3-ம் இடம் செல்வி ம கிறசென்சியா குவின்சி யா/புனிதர் சாள்ஸ் ம. வி

**2—ம் பிரிவு**

1-ம் இடம் செல்வி தி. பத்மசுதாஜினி யா/மண்டைதீவு றோ. க. பாடசாலை
2-ம் இடம் செல்வி லா. மேரிறேஸ் யா/மண்டைதீவு றோ. க. பாடசாலை
3-ம் இடம் செல்வன் பி. லோகநாதன் யா/புனிதர் சாள்ஸ் ம. வி.

**3—ம் பிரிவு**

1-ம் இடம் செல்வி ஆ. அரியமலர் யா/மண்டைதீவு றோ. க. பாடசாலை
2-ம் இடம் செல்வன் சி. பசில் தேவானந் யா/புனிதர் சாள்ஸ் ம. வி.
3-ம் இடம் செல்வி ப. சந்திரமதி யா/புனிதர் சாள்ஸ் ம வி.

கி. கிறிஸ்தோப்பர்
செயலாளர்
யா. க. ஆ. ச. யாழ். தெற்கு கிளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

## எம் கருத்து

# வாடாத் தேன்மாலை

''தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்'' இது பாரதி கண்ட கனவு. ஆனால் பாரதியின் கனவுக்கு முன்னரே இப்பணியை கிறிஸ்தவ மறையுலகம் செயற்படுத்தத் தொடங்கி விட்டது. ''கிறிஸ்தவர்கள் தமிழை வளர்த்தார்கள் என்பதனைவிட தமிழைப் பயன்படுத்திக் கொண்டார்கள்'' என்று குறுகிய நோக்கில் கூறுவோரும் இல்லாமலில்லை.

கிறிஸ்தவ நூல்களை மட்டுமே தமிழில் எழுதி வைத்தார்களாயின் இந்தக் குற்றச்சாட்டு ஒரு வேளை பொருந்தலாம். ஆனால் திருக்குறளையும், திருவாசகத்தையும் பிற மொழிகளில் மொழி பெயர்த்தும்— தமிழுக்கு புதிய எழுதது வடிவம் அமைத்துக் கொடுத்தும், தமிழ் அகராதிகளை எழுதியும் அவர்களாற்றிய பணிகளுக்கு சமயப்பணிகள் என்று சாயம் பூசிவிட முடியாது.

இத்தகைய கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர்களில் தேம்பாவணியை கோத்து தமிழன்னையை அலங்கரித்துவிட்ட இத்தாலியக் கம்பன் என்று புகழப்படும், கொன்ஸ்ரான்ரீயூஸ் ஜோசப் பெஸ்கியான வீரமாமுனிவன் ஆற்றிய தொண்டு அளப்பரியது, மறத்தற்கரியது.

கவிதை வடிவிலேயே சுவடிகள் எழுதப்பட்டு சமயக் கொள்கைகள் போதிக்கப்பட்டுவந்த 16-ம் நூற்றாண்டில் சமயப்பணியாற்ற வந்த பெஸ்கி அன்றைய தமிழ் மக்களுக்கு கவிதை வடிவிலேயே தனது இறைக்கொள்கைகளை இயம்புதற்கு இயற்றிய காப்பியமே தேமபாவணி.

சூசைமாமுனிவரை காவியத்தலைவனாகக் கொண்டு யாக்கப்பட்ட இக்காப்பியம்—அன்றைய தமிழக மக்களுக்கு ஒரு மறைநூலாகவே எழுதப்பட்டது. விவிலியக்கதைகளுடன் பல புனைகதைகளையும் சேர்த்து எழுதியதுடன் அன்று எழுந்த மதப்பிரச்சனைகளுக்கும் பதில் கூறும் நூலாகவும் முனிவர் இதனைப் படைத்துள்ளார்.

தமிழன் அல்லாத ஒருவனால் இயற்றப்பட்ட தேம்பாவணியானது, இன்று தமிழர் என்று பெருமை பட்டுக் கொள்ளும் எம்மவர்களால் அறியப்படாத ஒன்றாக இதுவரைகாலமும் ஒதுக்கிவைக்கப் பட்டிருந்தது பெரும வேதனைக்குரியதொன்றே.

இன்றைய கிறிஸ்தவ உலகில் கிறிஸ்தவ இலக்கியங்களுக்கு மறுமலர்ச்சி ஏற்படுவது போன்ற ஒரு நம்பிக்கை பிறந்துள்ளது. இந்த நம்பிக்கையை நிகழவிருக்கும் தேம்பாவணிவிழா தந்து நிற்கின்றது.

அறியப்படாத ஒன்றாக, அறிந்தாலும் படித்துச் சுவைத்துக் கொள்ள முடியாத கடுந்தமிழ்க் காப்பியமாக விளங்கும் தேம்பாவணியானது சாதாரணமக்களும் படித்துச் சுவைக்கக் கூடிய வகையில் இது சம்பந்தமான துணை நூல்களை எமது தமிழ அறிஞர்கள எழுதமுன்வருதல் வேண்டும்.

ஓர் தேம்பாவணிக்கு ஒரு விழாமட்டுமன்று—மறைவட்டங்களின் மட்டத்தில்—இன்னும் விரிவாக மறைவட்டாரம், பங்குகளின் மட்டத்தில் தேம்பாவணி விழாக்கள் பரவலாக்கப் படுதல் வேண்டும்— இந்த வாடாத்தேன்மாலையின் தேனை தமிழ் உலகம் சுவைக்கச் செய்ய வேண்டியது கிறிஸ்தவத் தமிழர் தம் கடமையுமாகும்.

இன்று தமிழ்ப்பற்றும் கலையுணர்வும் கொண்ட கலைஞர்களால் தமிழ் இலக்கியங்கள். காப்பியங்கள் போன்ற பல படைப்புக்கள் எளிய, எழிலான நடைகளால படித்தவரும், பாமரரும் படித்து இன்புறும் வண்ணம காலததுக்கேற்றவாறு புதுப்பொலிவுடன் புதுமையடைகின்றன. இந்த வேளையிலும் கத்தோலிக்க இலக்கியங்கள் காப்பியங்கள் காலத்துக்கேற்ற வாறு புதுப்பொலிவுற நாம் அனைவரும் ஆர்வமுள்ள அனைவரையும், ஊக்குவிப்போம், ஆதரவளிப்போம், ஆசிகூறுவோம,

முனிவர் புகழ்முரசை முழங்கிடுவோம்
முததமிழ்க் கலைகளை வளர்ததிடுவோம்

## தேனருவி

பாஸ்கு 2ஆம் ஞாயிறு (02–04–89)

### ''விசுவாச இருட்டடிப்பு''

தூயஅறிவு வடிவான இறைவனின் நன்மை தரும் திருவடிகளைத் தொழாதவர் என்றால் கற்றதனால் உண்டான பயன் யாதுமில்லை என்பது குறளின் பொருள். கொஞ்சம் படித்து விட்டால், நாலு தெரிந்துவிட்டால் ... இறைவன் யார்? அதுவெல்லாம் புலுடா என்று இறுமாப்பு அடையும் ஒரு கூட்டமும் எம் மத்தியில் இருக்கத்தான் செய்கிறது. ஞாயிறு வழிபாட்டிலும் பார்க்க ரியூஷனுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கும் மாணவரும், அவரது பெற்றோரும் எம் மத்தியில் இருக்கிறார்கள்தானே.

கண்ணால் காணமுடியாத எதையும், அறிவியல் அளவு கொண்டு அளக்க முடியாத எதையும் நம்ப மறுக்கின்றனர் சிலர். உண்மையில் அரைகுறை அறிவுதான் அகங்காரத்திற்கும், கடவுள் மறுப்பிற்கும், அலட்சியத்திற்கும் வழிகோலுகிறது.

அறிவியல் மனிதனின் பிரதிநிதியாக இன்றைய நற்செய்தியில் வருகிறார் புனித தோமையார். ''ஆணியால் உண்டான தழும்பைப் பார்த்து ஆணிகள் இருந்த இடத்தில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை இட்டாலொழிய விசுவசிக்க மாட்டேன்'' என்று கூறுவது அறிவியலின் சிகரத்தை தோமையார் எட்டிப்பிடிக்க எடுக்கும் ஓர் பிடிவாத முயற்சி. அனைத்தையும் ஆராய்ந்து தீர்க்கமான முடிவிற்கு வந்துவிட்டால் தப்பறைக்கு இடமில்லை. என்றுதான் நினைத்தாரோ. ஆயினும் விசுவாசத்தில் அவர் கோட்டைவிட்டு விடுகிறார். இங்கு தோமையாரை நாம் மட்டமாகக் கருதத் தேவையில்லை.

''காணாமலே விசுவசிப்பவர் பேறுபெற்றோர்'' என்று இயேசு கூறுகிறாரே தவிர காண ஆசைப்படுவது தவறு என்று கூறவில்லை. ஏனேதானோ என்று பட்டும்படாமலும் வாழும் எம் வாழ்விலும், தம் விசுவாசத்தில் நெருக்கடியைச் சந்தித்தாலும் பின்பு ஆண்டவருக்கு அடிபணிந்து முற்றிலும் தம்மைக் கையளித்து வாழ்வது பன்மடங்கு மேலானது.

அதேவேளை கிறிஸ்தவத்தை வெறும் தத்துவங்களாகவோ அன்றேல் கோட்பாடுகளாகவோ கருதி, நிறைவயிறுடன் நாற்காலிபோட்டு சமாச்சாரம் பேசுவது சமுத்திரத்தைச் சின்னச் சிப்பியினால் அள்ள விரும்பும் மடமைத்தனமாகிவிடும். இன்னும் சிலர் ஆலய வழிபாடுகளை நடை, உடை காட்டுவதற்கும், நேரத்தைப் போக்க ஒன்றுகூடும் கொட்டகையாகவும் கருதுவது உயிர்ப்பு இறைவனை பட்டப்பகலிலும் காணமுடியாத குருடர்களைப் போலாகிறது.

வேதம் ஒரு வாழ்க்கை. அதனால் அப்போஸ்தலர்கள் உயிர்ப்பு இயேசுவைக் கண்டு கொண்டவர்கள். அவர் காயங்களைத் தம் உடலிலும் தாங்கத் துணிவுகொண்டனர். ''என் ஆண்டவரே, என் கடவுளே'' என்று வார்த்தையால் மட்டுமல்ல வாழ்விலும் விசுவாச உச்சாரணம் செய்தனர். அதனால் தான் அப்போஸ்தலர் வழியாக அருங்குறிகள் பல தொடர்ந்தன. மேலும் பல விசுவாசிகள் திருச்சபையில் இணைந்து கொண்டனர்.

நாமோ ''ஆண்டவரே, ஆண்டவரே'' என்று உயிருள்ள தெய்வத்தை ஆலயக்கதவுகளுக்குள் பூட்டிவிட்டு எம் சொந்தக் கற்பனையில், எமக்கு வசதியான மனித தெய்வங்களைப் படைத்து சில வழிபாடு செய்கிறோம்.

பங்குத்தளங்களிலும், குடும்பங்களிலும் எழும் சில்லறைச் சிக்கல்களைப் பாருங்கள். மொத்தத்தில் அந்தஸ்துப் பிரச்சனையும் அகங்காரப் பிரச்சனையுமே ''நம்பமாட்டேன்'' எனச் சிறிது நேரம் நீடித்த தோமையாரின் ''விசுவாச இருட்டடிப்பு'' காலா காலமாக எம் மத்தியில் வளருகிறது. அகங்காரம் தலைதூக்கி உயிருள்ள ஆண்டவனைத் தொழ மறுக்கிறது.

சுவாமி ஜீவாபோல், அ.ம.தி.

அப். பணி. 5:12-16 விசுவசித்தோரின் எண்ணிக்கை பெருகியது.
திருவெளி. 1 : 9 - 19 தேவஆவி என்னை ஆட்கொண்டது.
அரு 20 : 19 - 31 என் ஆண்டவரே, என் கடவுளே.

★

பாஸ்கு 3ஆம் ஞாயிறு (09–04–89)

### அவர் செயலாற்றுகிறார்

''வலது காலை எடுத்து வைத்து வா, வா!'' இது மங்கல நிகழச்சிக்கு ஒரு தொடக்கம். தெய்வத்தையும் வலம் வந்துதான் வணங்குதல் மரபு.

1. வலப் பக்கமாய் வலையை வீசுங்கள் என்று உயிர்த்த இயேசு மொழிவது, இராமுழுவதும் முயற்சி எடுத்தும் ஏமாந்து போன சீடர்களின் மனங்களில் மகிழ்ச்சி தங்கச் செய்வதற்குத்தான். வலை இழுக்க முடியாத அளவிற்கு மீன்பாடு கிடைத்தது. சீடர்களின்சொந்த முயற்சியாலன்று. அது அவர் செயல்.

2. அது மட்டுமல்ல கரையில் உடற்களைப்பைப் போக்க அப்பமும், மீனும் உண்ண அன்போடு அழைப்பதும் அவரது செயல்தான். அப்பமும் மீனும்- ''நற்கருணை பந்தியையும்'' குறித்து நிற்கிறது.

3. பின்பு சீமோன் இராயப்பரின் அன்பைப் பரிசோதித்து ஆடுகளையும், ஆட்டுக் குட்டிகளையும் மேய்க்கப் பணிப்பதும் அவர் செயல்தான். நிருவாகமும், அதிகாரமும் வாழும் தெய்வத்தின் செயல் என்பதையும் சொல்லாமற் சொல்கிறார் இயேசு.

இந்த மூன்று நிகழ்ச்சிகளும் அங்கு நடைபெறும் உரையாடல்களும் நிகழ இருக்கும் பிரச்சனைகளுக்கு முன்கூட்டியே தீர்வு வழங்கும் தீர்க்கதரிசனச் செயல்கள் போலத் தென்படுகின்றன.

திருச்சபையில் காலத்திற்குக் காலம் எழும் சர்ச்சைகளும், எதிர்ப்புக்களும், கலாபனைகளும் மனித வல்லமையினால் ஜெயிக்க முடியாது என்றும் யாவற்றையும் மங்கலகரமாக மாற்றும் சக்தி உயிர்த்த இயேசுவுக்கு உண்டு என்றும் இந்நிகழ்ச்சி உணர்த்துகின்றது. திருச்சபையில் உள்ளும், புறமும் எழும் எதிர்ப்புக்களும் ஏமாற்றங்களும் வலப்பக்கமாய் வலை வீசுங்கள்' என்று கூறும் இயேசுவின் தலைமைத்துவத்தை ஏற்கும் போதும் சுலபமாய் தோற்கடிக்கப்படுகின்றன

சில பதித இயக்கத்தினரும், புரட்சிவாதிகளும் இராயப்பரின் தலைமைத்துவத்தையும், திருச்சபையின் உண்மைத்தனத்தையும் பற்றி வீணே சந்தேகித்து அவதூறு பேசித் திரிகின்றனர், நோவாவின் பேழை போன்ற திருச்சபை வெள்ளப் பெருக்காகத் துன்பங்கள் வந்தாலும் மலை போன்று உறுதியுடன் உயர்ந்து நிற்கும் என்பதற்கு அதன் வலப்பக்க அரணாய் நிற்கும் உயிர்த்த கிறிஸ்துவே அரணாகிறார்.

தலைமைக் குருக்கள் இராயப்பரையும் அப்போஸ்தலர்களையும் கைதுசெய்து கடுமையான எச்சரிக்கைகள் விடுத்தார்கள். உயிர்த்த கிறிஸ்துவின் வீறுகொண்ட சீடர்கள் எதற்கும் அஞ்சாத வீரர்களாய் சாட்சியம் பகர்ந்தனர்.

அப்போஸ்தலர்களிலும் முன்னணி வகித்த இராயப்பரின் சிந்தனைகள், உணர்வுகள், செயற்பாடுகள் சிந்திக்கச் சிந்திக்க விசித்திரமாகவே இருக்கிறது.

இராயப்பர் எதிலும் முன்னணி வகிக்கும் ஒரு துடிப்புள்ள மனிதன் தான். ஆயினும் குறைகளுக்கும் விதிவிலக்கான வரல்ல. அதிக உணர்ச்சிவசப்

(தொடர்ச்சி 8 ஆம் பக்கம்)

அப். பணி. 5: 27-41 கடவுளுக்குக் கீழ்ப்படிவோம்
திருவெளி. 5: 11-14 அவர் வல்லமையும், செல்வமும் பெறத் தகுதியுள்ளவர்
அரு. 21:1-19 வலப்பக்கமாய் வீசுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைகள் மட்டில் நாம் செய்யும் சேவைக்கு இவ்வுலகிலேயே எமக்குப் பலன் கிடைக்கும்

புனித வின்சென் டி போல் சபையின்; நாவாந்துறை புனித மரியாள் பந்தியினர் தமது 79-ம் ஆண்டு வருடாந்தப் பொதுக்கூட்டத்தை மாசி மாதம் 12-ந் திகதி (12-2-89) நடாத்தினர். மேற்படி கூட்டத்திற்கு பந்தியின் தலைவர் சகோ. சி. செலஸ்ரீன் தலைமை வகித்தார்.

அவர் தமது தலைமை உரையில் ஏழை, எளியவர் மட்டில் நாம் செய்யும் அன்பின் சேவைகளுக்கு மறு உலகில் பலாபலனை எதிர்பார்க்க வேண்டியதல்ல. மாறாக இவ்வுலகிலேயே கைமாறு கிடைக்கின்றது, இதனை எவரும் மறுக்கமுடியாது என்றும் குறிப்பிட்டார். மேற்படி கூற்றிற்கு ஆதாரமாக கரம்பொன் புனித செபஸ்தியார் பந்தியின் தலைவரின் சேவை—மரணம் பற்றியும் எடுத்துக்காட்டி உரையாற்றினர்

மேற்படி கூட்டத்தில் ஆசியுரை வழங்கிய பந்தியின் ஞான ஆலோசகர் அருள் தந்தை சாள்ஸ் செந்தில்வேல் அவர்கள், இச்சபையின் சேவைகள் இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவை. எனவேதான் இன்றும் இச்சபை உலகெங்கும் பரந்து பணியாற்றி வருவதை நாம் காண்கின்றோம் என்று கூறியதுடன் இச்சபையின் சகோதரர்கள் தங்கள் சொல்லால் மட்டுமன்று செயலாலும் வாழ்ந்து காட்டவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

யாழ். மத்திய சபையின் ஆன்ம ஆலோசகரும் இன்றைய கூட்டத்தின் பிரதம அதிதியுமாகிய அருட்தந்தை எஸ்.எச். ஜெபநேசன் தமது சிறப்புரையில்; நாம் ஏன் ஏழைகளுக்கு உதவிசெய்கின்றோம்? ஏனெனில் நாம் ஏழை எளியவர்களில் இறைவனைக் காண்கிறோம்; என்றார். தொடர்ந்தும் அவர் உரையாற்றுகையில் பின்தங்கிய நாடுகளில் மட்டுமல்ல; முன்னேற்றம் அடைந்துள்ள ஐரோப்பிய நாடுகளிலும் வறியவர்கள் இருக்கிறார்கள் அங்கு ஏதோ ஒருவகையில் வறுமை நிலவுகிறது. அது பொருளாதார வறுமையாக இல்லாவிட்டாலும் ஆன்மீக வறுமையாக யாகவும் இருக்கும் என்று குறிப்பிட்டார். அத்துடன் இது பொதுநிலையினருடைய சபை. எனவே இதில் பலர் சேர்ந்து பணிபுரிவதால் இறை அருளும், ஆசியும் நிறைவாகக் கிடைக்கும் என்றும் ஆசி கூறினர்.

மேற்படி கூட்டத்திற்கு யாழ். மறைவட்டத்தில் அன்புப் பணிபுரியும் சகோதர பந்திகளின் பிரதிநிதிகள்; பங்கின் பக்திச் சபையைச் சார்ந்த பிரதிநிதிகள்; உபகாரிகள் ஆகியோர் ஏறத்தாழ எண்பதிற்கும் அதிகமானோர் சமுகம் தந்தனர்.

இவர்கள் பார்வையாளர்களாக மட்டும் இராது; பங்காளர்களாகவும் இருந்து பந்தியின் செயற்பாடுகளை வாத்தியத்துடன்; சிற்றுண்டி உபசரணைகளில் மெய்மறந்துசென்றனர்.

தகவல்:- நாவாயூர் தயாளன்

# வட்டக்கச்சியில் பொதுநிலையினர் அமைப்பு

வட்டக்கச்சி புனித சூசையப்பர் ஆலயத்தில் 19-2-89 ஞாயிற்றுக்கிழமை பொதுநிலையினர் கழக அங்குரார்ப்பணக் கூட்டம் இடம் பெற்றது. பங்குத்தந்தை அருள்திரு. இராசூசைநாதன் அவர்களின் தலைமையில் இடம் பெற்ற இக்கூட்டத்தில் வட்டக்கச்சி, இராமநாதபுரம், கல்மடு நகர் ஆகிய இடங்களிலுள்ள ஆலயங்களிலும் நிர்வாகசபை மற்றும் பக்திச் சபைகளின் அங்கத்தவர்கள் பெருந்திரளாய்ப் பங்கு கொண்டனர். ஆரம்ப உரை நிகழ்த்திய பங்குத் தந்தை அவர்கள் தமதுரையில் பொதுநிலையினர் என்றால் யார்? இக்கழகம் அமைக்கப்படுவதன் நோக்கம், அதன் செயற்பாடுகள், கட்டமைப்பு என்பன பற்றி தெளிவாக விளக்க மளித்தார். தொடர்ந்து கருத்துரை வழங்கிய அருள் சகோதரன் க. அருள்நேசன் அவர்கள் தமதுரையில் திருமுழுக்குப் பெற்ற அனைவரும் பொதுநிலையினர் எனவும், திருவழிபாடுகளில் இவர்களது பங்களிப்பு வழிபாட்டைமேலும் அர்த்தமுள்ள தாக்கும் எனவும் குறிப்பிட்டார் அதன் பின்பு வட்டக்கச்சி பங்கின் பொதுநிலையினர் கழக நிருவாகிகள் தெரிவு இடம்பெற்றது. நிருவாகிகளாய் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. மி. அருளப்பு கல்மடு, உபதலைவர் திரு. ஞா. வரப்பிரகாசம் வட்டக்கச்சி, செயலாளர் திருமதி. குஹெலன் மேரி திரேசா வட்டக்கச்சி, உபசெயலாளர் திருமதி. வைலற் மத்தியூஸ்-இராமநாதபுரம், பொருளாளர் திருமதி. மேரி மாக்கிரட் வட்டக்கச்சி, இவர்களுடன் பின்வருவோர் நிர்வாக சபைக்கென தெரிவு செய்யப்பட்டனர்.

(1) ம. திவ்விய நாயகம், (2) அ. ஜீவா, வட்டக்கச்சி (3) மி. எட்வேட் கல்மடு. (4) செல்வ ரெத்தினம், இராமநாதபுரம்.

நிர்வாகிகள் தெரிவின் பின்னர் கழகத்தின் செயற்பாடுகள் எப்படி அமைய வேண்டுமென கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து இறைவணக்கத்துடன் கூட்டம் இனிதே நிறைவெய்தியது.

தகவல்: லங்கா

# விசுவாசத்தை உறுதிப்படுத்த பாஷையூரில் கருத்தரங்கு

ஞானஸ்நானம் பெற்ற கிறிஸ்தவர்களின் விசுவாசத்தை உறுதிப்படுத்தி ஆழமக்க பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய மக்களுக்கு ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் மாலையில் கருத்தரங்குகள் பங்குத் தந்தையினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

பங்குனி மாதம் 4-ம் திகதி ஆரம்பமான கருத்தரங்கில் காவலூரைச் சேர்ந்த திரு. கீதபொன்கலன் தனது ஆத்மீகப் பயணத்தை [ My Spiritual Journey ] மக்களுக்கு இரசிக்கக் கூடிய விதத்தில் கூறினார்.

கத்தோலிக்க குடும்பத்திலே பிறந்த இவர் சில காரணிகளால் பிரிவினைச்சபையிலே சேர்ந்து ஒரு போதகராகக் கடமையாற்றி அந்தச் சபையிலே செய்யக் கூடிய அனைத்துப் பணிகளையும் செய்தார். தனது பிழையை உணர்ந்தவராக மீண்டும் கத்தோலிக்க மறையிலே சேர்ந்து, தன்னுடைய வாழ்க்கையிலே விட்ட மாபெரும் பிழையை கத்தோலிக்கருக்கு பகிர்வதிலே மிகவும் ஆர்வம் கொண்ட ஒருவராக செயற்பட்டு வருகிறார் தன்னுடைய வாழ்க்கையிலே விட்ட அந்தப் பிழையை மற்றவர்களும விடக்கூடாது என்பதைத்தான் அவர் ஆணித்தரமாகக் கூறிக்கொண்டார்.

(தொடர்ச்சி 7 ஆம் பக்கம்)

# பாதுகாவலன் மன்றம் —வலைப்பாடு

வலைப்பாட்டுப் பங்கில் பாதுகாவலன் மன்றத்தை கடந்த (1-3-89) புதன் கிழமை புதிதாக வண பிதா ஜெயக்குமார் பங்குத் தந்தை அவர்கள், மாலை 6-30 மணிக்கு றோ. க. த. க. பாடசாலையில் இறை வணக்கத்துடன் ஆரம்பித்து வைத்தார்.

இம் மன்றத்திற்கு திருமணமாகியவர்கள், இளைஞர், யுவதிகள், மாணவ மாணவிகள் பலரும் பங்கு கொண்டனர், அதே வேளை பங்குத் தந்தையின் உரையில் இரண்டு முக்கிய அம்சங்கள் இடம் பெற்றன.

1. காவலன் மூலம் கிறிஸ்தவ மறை உண்மைகளை மக்கள் மத்தியில் கொண்டு செல்லுதல்.

2 சொந்த இறை ஆற்றல்களை காவலன் மூலம் வெளிக்கொணருதல் பகிர்ந்துகொள்ளுதல், என்னும் அம்சங்களின் கருத்துக்களை அங்கத்தவர்களுக்கு எடுத்துரைத்தார். அத்தோடு காவலன் மன்றம் முடிவுச் செபத்துடன் முடிவடைந்தது.

மரியாயின் சேனையார்
வலைப்பாடு

# ஆசிய கிறிஸ்மஸ் வாழ்த்துமடல் போட்டி

**ஆசிய நாடுகளைச் சேர்ந்த திருப்பாலத்துவ சபையார் அனைத்துச் சிறுவர்களுக்கும் விடுக்கும் அழைப்பு**

போட்டி நிபந்தனைகள்

★ 31-3-1975க்குப்பின்னர் பிறந்தவர்கள் பங்குபற்றலாம்.

★ கிறிஸ்மஸ் சம்பந்தமான எந்த விடயமும் ஓவியத்தின் பொருளாகலாம்.

★ இலங்கையின் கலாசாரத்தை பிரதிபலிக்கும் ஓவியங்கள் சிறப்பாக வரவேற்கப்படுகின்றன.

★ போட்டிக்குரிய ஓவியங்கள் மதகுரு, பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர், ஒருவரால் போட்டியாளரின் பிறந்த திகதி, முகவரி ஆகியவற்றுடன் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

★ 14×10 செ. மீ. அளவுகொண்ட நல்ல கடதாசியில், விரும்பிய வர்ணங்களை உபயோகித்து ஓவியம் வரையப்படலாம்.

★ முடிவு திகதி: 30-4-1989.

★ ஒருவர் எத்தனை ஓவியங்களையும் அனுப்பலாம்

★ அனுப்பவேண்டிய முகவரி:

தேசிய இயக்குநர்
திருப்பாலத்துவ சபை
19, பால்கொம் பிளேஸ்,
கொழும்பு-8.

★ ஓவியங்கள் தகுதிவாய்ந்தவர்களினால் பரிசீலிக்கப்பட்டு சிறந்த 30 ஓவியங்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்,

1 பரிசு 3000/-
2 ,, 2000/-
3 ,, 1000/-

27 ஆறுதல் பரிசுகள் ஒவ்வொன்றும் 100/-

★ முதல் ஓவியங்கள் சர்வதேசிய போட்டிக்குச் சமர்ப்பிக்கப்பட்டு மேலதிக பரிசில்களுக்கு தகுதிபார்க்கப்படும்.

★ சர்வதேசிய போட்டியில் தெரிவாகும் 9 ஓவியங்கள் விற்பனை செய்யப்படும். சேரும் நிதி சர்வதேசிய குழந்தைகள் நிதியத்துக்கு அனுப்பப்படும்.

★ விற்பனையால் சேகரிக்கப்படும் பணத்துக்கு வெற்றி பெறும் போட்டியாளர்கள் உரிமைகோரமுடியாது.

# பள்ளிமுனைப்பங்கில் வழிபாட்டுக்குழு சீரமைப்பு

இப் பங்கில் கடந்த 2 வருடங்களாக வழிபாட்டுக்குழு மறையாசிரியர் தலைமையில் இயங்கி வந்தது. பொறுப்புக்கள் பகிரப்படவும் தலைமைத்துவப் பயிற்சி பரவலாக்கப்படவும் இக் குழுக்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டு இயங்குவதென முடிவுசெய்யப்பட்டது.

பங்குத்தந்தையினதும் மற்றும் பெரியவர்களினதும் பரிந்துரையின்பேரில் பங்குத்தந்தையின் தலைமையில் வழிபாட்டுக் குழு 7-2-89 இல் முதன்முதலில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதில் திருமணமானவர்கள், இளைஞர்கள், யுவதிகள், பாடசாலை மாணவர்கள் பாடகர் குழாம் உறுப்பினர்கள் தமது சேவையை மனமுவந்து அளித்து புத்தூக்கத்துடன் கூட்டத்திற்கு சமூகமளித்தது பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். பங்குத்தந்தை அருள்திரு. அல்பன் இராஜசிங்கம் (அ. ம. தி) அடிகளார் தலைமையில் இம்மன்றம் துள்ளு நடை போடுவதைக் காணக் கூடியதாய் உள்ளது.

''வாழ்க இம்மன்றம் வள்ர்க அதன் சேவை''

தகவல்: S. இதயராணி றேச்
பள்ளிமுனை

# நெடுந்தீவுப் பங்கில் தையல் பயிற்சி நிலையம்

நெடுந்தீவுப் பங்குத் தந்தையின் அயராத பெரும் முயற்சியால் நெடுநகர்ப் பங்கில் மனித நேய முன்னேற்ற சங்கத்தால் ஓர் தையல் பயிற்சி நிலையம் ஆரம்பித்து வைககப்பட்டது.

1-3-89 காலை 9-30 மணிக்கு அர்ச் அந்தோனியார் பாடசாலையில் பங்குத் தந்தையின் அனுசரணையுடன் நெடு. கூட்டுறவு பரிசோதகர் திரு. கேதீஸ்வரன் அவர்களால் மங்களகரமாக திறந்து வைக்கப்பட்டது. அவ்வைபவத்தில் உரையாற்றிய பங்குத் தந்தை எம். எம். வி. அமிர்தகுமார் அவர்கள் சகல மக்களுக்கும் பயன் தரக்கூடிய விதத்தில் அமைந்த இந்நிலையத்தை சகலரும் பயன்படுத்தி முன்னேற வேண்டுமென கேட்டுக் கொண்ட அவர் தனது வேண்டுகோளுக்கு செவிசாய்த்து இத்தையல் பயிற்சி நிலையத்தை ஆரம்பிக்க தையல் இயந்திரங்களை வழங்கிய மனித நேய முன்னேற்ற சங்கத்திற்கு நன்றி தெரிவித்தார்.

இவ் விழாவில் சிறப்புரை ஆற்றிய அருள்செல்வன் சேவியர் கருணாரத்தின அவர்கள் தனது உரையில் தையல் என்பது மனிதனால் உண்டாக்கப்பட்டதல்ல ஆதிப்பெற்றோருக்கு இறைவனால் இலைகுழைகள் ஆடையாக நெய்யப்பட்டு வழங்கப்பட்ட காலத்திலேயே தையல் கலை தோன்றிவிட்டது. எனவே இறை ஆசியுடன் இக்கலையை ஊக்கமாகப் பயின்று பயன்பெற வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

அவ்வைபவத்தில் அருள் சோதரிகளும் கலந்து சிறப்புரை வழங்கிச் சிறப்பித்தார்கள். ஆரம்ப தையல் பயிற்சிக்கென (22) மாணவிகள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்

தகவல்: நெடுநகர் நேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்மைக்குள் உண்மை

நீலவானமே விதானமாக விண்மீன்கள் விளக்குகளாக மின்னி மின்னி கண்களைச் சிமிட்டுகின்றன. தென்றலின் மெல்லிய வருடல் சுகமாக இருக்க கடலலையின் பேரிரைச்சல் இனிய தாலாட்டாக, வெண்மணற் பரப்பு பஞ்சு மெத்தையாக அந்த மெத்தையிலே நீட்டி நிமிர்ந்து கிடக்கின்றது ஓர் உருவம். எங்கும் நிசப்தம்... இருகைகளையும் பிடரிக்குப்பின்னால் அணையாகக் கட்டிய பாவனை அவன் தூங்கவில்லை. தீவிரமாக சிந்தனை வசப்படடிருக்கின்றான் என்பதை உணர்த்தியது. அவனுடைய ஒளிவீசும் கண்கள் மூடிக்கிடந்தன மூடிய விழியோரங்களில் நீர்த்துளி வெளியேறத் துடித்துக்கொண்டிருந்தது.

தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன் என்றுதான் எல்லோரும் எள்ளி நகையாடுகின்றார்கள். ஆனால் அவன் கொள்கைகள் உயர்ந்தவை. படிக்காத பரம்பரை என்றுதான் எல்லோரும் பரிகாசம் செய்கின்றார்கள் ஆனால் அவன் சிந்தனைகள் மேம்பட்டவை வறுமையான வர்க்கத்தில் வாழ்பவன் என்றுதான் எல்லோரும் வாய்புலம்புகிறார்கள். ஆனால் அவன் வயிறல்ல... உள்ளம் நிறைந்திருக்கின்றது என்பதைத்தான் எவருமே புரியவில்லை.

அந்த இருட்டில் தலையைத் திருப்பிக் கடலைக்கூர்ந்த கவனிக்கின்றான். அவன் வாழ்க்கையைப் பிரதிபலிப்பது போலவே அலைகளும் வேகமாக ஓடிவந்து கரையில் கரைந்து போகின்றன. "என்னுடைய இலட்சியங்களும், கொள்கைகளும் முடிவைக் கண்டு பிடிக்காமல் கரைந்துவிட வேண்டியதுதானா? "என்று மனம் கேட்கின்றது. வானத்து நிலவைப் பார்க்கின்றான். தேய்ந்துவிட்ட அந்த நிலவு போலவே எனது வேதனைகளும் தேய்ந்துவிடக்கூடாதா?" இதையும் மனம்தான் கேட்கின்றது.

அன்றொரு நாள் பள்ளிச் சிறுவனாக இருந்தபோது கந்தைத் துணி என்று கேலி செய்யப்பட்ட நேரம் தோன்றியது ஒரு மன உறுதி. அது இன்றுவரை அவனை கந்தைத் துணியைத் தான் சகிக்கக் கட்டும்படி செய்துவிட்டுள்ளது. வறுமையால் படிப்பை இடையில் நிறுத்தியபோது தோன்றியதே ஒரு மனவுறுதி. அது அவனைப் படித்தவனைவிட மேதாவியாகவிட்டுள்ளது. மதுவில், மாதுவில் பழகியவர்களைக் கண்டு கொண்டபோது தோன்றியது ஒரு உறுதி அது அவனை ஒரு பிரமச்சாரியாக ஆக்கிவிட்டுள்ளது. சீதனக்கொடுமையால் திருமணமாகாமல் பிறரின் பழிப்புக்கு ஆளான பெண்ணொருத்தி தற்கொலை செய்து கொண்டாளே அப்போது தோன்றியதே ஒரு உறுதி. அது அவனை ஒரு சீர்திருத்தவாதியாக மாற்றிவிட்டிருந்தது.

இந்த உறுதிகளுக்கும், அவனுக்குமிடையில்தான் கடுமையான போராட்டத்தை வீட்டு நிலைமை நிகழ்த்திக்கொண்டிருக்கிறது. அவனுக்குத் திருமணமாம். அதுவும் நிறையச் சீதனத்துடன் அம்மாவும், அப்பாவும் எங்கேயோ தேடிப்பிடித்துள்ள குடும்பம். அவனுடைய பிரமச்சாரிய வாழ்விலும், சீர்திருத்தஎண்ணத்திலும் விழுந்த பலத்த அடியால் துடிதுடித்துப் போனான். எல்லோருக்கும் சேவை செய்யவேண்டும் எடுத்துவிட்ட மனிதப் பிறப்பை எல்லோருக்கும் பயனுள்ளதாக

✻✻✻✻✻✻✻✻✻✻✻

எஸ். நெலோமி
- மன்னார்

✻✻✻✻✻✻✻✻✻✻✻

மாற்றவேண்டும் என்ற எண்ணம் தவிடுபொடியாகும் நிலையில் இருந்தது. திருமணத்தை தனது சுதந்திர வாழ்வுக்குப் போடும் ஒரு பலத்த சங்கிலிப் பிணைப்பாகவே கருதினான். தான் ஒருத்திக்கு மட்டுமல்ல, உலகத்துக்கே உரிமையாளனாக மாறவேண்டும் என நினைத்தான்.

வீட்டிலே போராடிப் பார்த்தாயிற்று அம்மாவுக்கு மூக்கைச் சிந்திக்கொண்டு அழுவதைத் தவிர வேறொன்றும் தெரியவில்லை. அப்பா குதிக்கின்றார். அவன் வாங்கப்போகும் சீதனத்தால்தான் மற்றைய சகோதரங்களின் வாழ்வு, குறிப்பாக வயது ஏறியும் திருமணமாகாமல் வீட்டில் இருக்கும் அக்காவின் வாழ்வும் விடியும் என மந்திரம் ஓதப்பட்டுவிட்டது. சகோதர பாசத்துக்கும், சமுதாயப் பாசத்துக்கும் இடைப்பட்ட நிலை, சுயநலத்திற்கும் பிறர் நலத்திற்கும் இடைப்பட்ட நிலையில் தவித்துக்கொண்டிருந்தான். அந்தக் கடற்கரையே அதிரும்படி கத்த வேண்டும்போல் தோன்றியது. அடக்கிக்கொண்டான்

மெதுவாகப் புரண்டு படுக்கிறான். அவனின் சிந்தனையும் விழித்துக்கொண்டது "நான் கொண்ட இலட்சியம்மேலானது சீதனத்தை எதிர்த்துக் கொண்டே அதை வளர்க்கவும் நானே முற்பட்டால் அது எவ்வளவு பரிய முட்டாள்தனம். எனக்குத் திருமணமே வேண்டாம். என் வாழ்வு இலட்சிய வாழ்வு. நான் அதை எவருக்காகவும் விட்டுக்கொடுக்கத்தயாராயில்லை. என்னுடைய உடல் உழைப்பே போதும், மற்றவர்களிடம் கையேந்திப்பணம்வாங்கும் நிலை வேண்டாம்.

மனம் இப்படித் தீர்மானித்துக்கொண்டதும் எழுந்து கொண்டான். உடையில்பட்ட மணலைத் தட்டிவிட்டபோது வேதனைகளையும் கூடவே தட்டி உதறிவிட்டதாக நினைத்துக் கொண்டான்.

படலையடிக்கு வந்ததும் வீட்டை நோட்டம்விட்டான். மங்கலாக எரிந்து வி[illegible]யில் அக்கா ஏதையோ படித்துக்கொண்டிருப்பது தெரிந்தது. அம்மா வாசல்படியில் சாய்ந்துகொண்டிருந்தாள். அவனைக் கண்டதும் அவளின் வாய் மங்களம்பாடத் தொடங்கிவிட்டது.

"வாங்கோ.. மகா...ராசா... என்ன ஊர் அலுவல் எல்லாம் நல்லபடியாமுடிஞ்சுதா... குடும்பத்தைப் பார்க்கத் துப்பில்லை. ஊர் விவகாரத்துக்குப் போறாம். ஏண்டா.. உன்னைப் பெத்து என்னத்தையடா கண்டம். வீட்டில் ஒரு குமர் இருக்கிறதெண்ட யோசனை கொஞ்சமாவது இருக்குதா?"

திரும்பி மௌனமாக அக்காவைப் பார்க்கின்றான். அக்கா அவனைப் பார்த்து ஆதரவாகப் புன்னகைக்க கண்களில் நீர் நிறைந்துவிட்டது. அதை மறைக்க முகத்தைத் திருப்பிக் கொண்டாள்.

அப்பாவும் பங்குக்கு அம்மாவுடன் சேர்ந்துகொண்டார்.

## சிறுகதை

"இண்டைக்கு கதிரமலை அண்ணன் வந்திட்டுப் போறார். என்ன அதிஷ்டமோ தெரியேல்லை, இல்லாட்டி ஏன் இப்படிச் சீதனத்தோட ஒண்டுமில்லாத எங்களிட்ட வரவேணும்? மனிசனுக்கு நல்ல குணமானபெடியன்தானும்வேணும். இந்தக் காலத்தில ஆரடா இப்பிடி பெண் குடுக்க வருகினம். அக்காவிட நிலைமையாவது நினைச்சுப்பார்த்தியா... நாங்கள் விசருகள் மாதிரி கத்திக்கொண்டிருக்கிறம். நீ முகட்டைப் பார்த்துக்கொண்டு நில்லு"...

"சமூக சேவை செய்து என்னத்தைக் காணப்போகினம். அவனவன சொல்லிப் போட்டு சீதனத்தோட கலியாணம செய்துகொண்டு சவூதிக்குப் பறந்து போகுதுகள். இதுகள் மக்குகள், ஒரு மட்டையும் விளங்காததுகள்... சமூகத்தைக் கட்டிப்பிடிச்சுக்கொண்டு கிடவுங்கோ..."

"ஆத்திரத்துடன் அப்பா கத்திக்கொண்டார். அம்மா புறுபுறுத்துக்கொண்டிருந்தாள். அக்காவப் பாத்தியா... அக்காவப் பார்... அவளை ஆர் கரை சேர்க்கிறது... அம்மாவின் வாயில் இடைவிடாது ஒலித்துக்கொண்டிருந்த சொற்களைக் கேட்க ஆத்திரமாக இருந்தது.

"நான் உழைச்சு அக்காவ கரை சேர்த்துப் போடுவன். நீங்கள் என்னக் கலியாணம் செய்விச்சுத்தான் அதைச்செய்யவேண்டுமென்றில்லை."

முதல்முதலாக வாய்திறந்து பேசிவிட்டேன். அம்மாவுக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது.

"ஓமோம் உழைப்பீர். உம்மட படிப்புக்கு உத்தியோ[illegible] கொண்டு நிக்கினம். எத்தனை வரிசமா உத்தியோகர் கொட்டிக்கொண்டு வீடு தேடி வருகுது"

"கேலியாகக்கூறி விட்டு விசும்பத் தொடங்கிவிட்டாள். அவனுக்கு ஆத்திரமும் வேதனையும்...

"சரி நான் இப்ப சீதனம் வாங்கவில்லை. கலியாணம் செய்யேல்ல. அக்காவ கரை சேர்க்கேலல எண்டுதானே குதிக்கிறியள். சரி உங்களுக்கு விருப்பமானதையே நான் செய்யிறன. போய் என்னத்தையாவது செய்யுங்கோ" ஆத்திரத்தில் சொல்லியவன் அக்காவைப் பார்த்ததும் அடங்கிப்போனான்."

"அம்மா உண்மையைத்தான் சொல்லுறன். கலியாணத்துக்கு ஏற்பாடு செய்யுங்கோ, என்னால அக்காட வாழ்வு கருகிப்போக வேண்டாம்" அவனையும் மீறி கண்ணீர் கன்னங்களில் உருண்டோடிக்கொண்டிருந்தது. அதில் அவன் இலட்சியங்களும் இயலாமையால் கரைந்துகொண்டிருந்தன.

"தம்பி..." அக்கா வனிதா தான்அழைத்தாள் "என்னப்பா சொல்லிப் போட்டாய். நான் உன்னைப் பற்றிப் பெரிசா நினைச்சுக்கொண்டிருக்கிறன் என்ர தம்பி கொள்கைவாதியென்று பெருமைப்படுகிறன். நீ இவங்கட சொல்லுக்காக அந்தப் பெருமையை அழிச்சுப்போடக் கூடாது. இன்னொரு பெண்ணிட்ட காசு வாங்கித்தான் எனக்குக் கலியாணமெண்டால் அது எனக்குத் தேவையில்லை."

"என்னை என்னெண்டுநினைச்சுக்கொண்டிருக்கிறாய் .. டேய் ... நான் உன்ர அக்காடா... உன்னுடைய கொள்கைகள் எனக்குள்ளேயும் இருக்கு. நான் யாருக்கும் சீதனம் குடுக்கமாட்டன். எனக்கு இப்ப கலியாணம் தேவை என்று நான் அடம்பிடிக்கவில்லை. யாராவது இலட்சியவாதியாய் இருந்தா என்னைக் கட்டட்டும். அது வரைக்கும் எனக்கு எப்பிடி வாழவேண்டுமென்று தெரியும். அப்பிடி இல்லாட்டாலும் என்னால வாழமுடியும்."

தன்னுடைய எண்ணத்துக்கு பெற்றோரையும் மீறி வாழ்க்கைத் துணையைத் தேடிக் கொண்டு குழந்தைகளுக்குத் தாயான பின்னர் தன் பெற்றோரிடம் சீதனம் கேட்டுச் சண்டைபிடிக்கும் பெண்களுக்கு மத்தியில் இப்படியும் ஒரு பெண்ணா? அதுவும எனது அக்காளா? என்று வியப்போடும் பெருமையோடும் அவளைப் பார்த்து நின்றான் அவன். அவள் பேசினாள், அவளுடைய பெண்மை பேசியது. அதுவும் உண்மை பேசியது.

"ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு இலட்சியங்கள், அதை அடுத்தவள் தனது சுயநலத்துக்காக சிதைத்து விடுவது எந்தளவுக்கு நியாயம். தம்பி நான் உனக்குத் துணை நிற்கிறனடா... நீ கவலைப்படவேண்டாம். என்னைப் பார்க்கிற போதெல்லாம் என்ர கலியாணமாகாத நிலை உன் உறுதியை உடைத்துவிடக்கூடாது. ஒரு இலட்சியத்தை அடைய ஒரு பெண்ணினுடைய துணையும் கிடைத்தால் அதைவிட பெரிய வெற்றி தேவையில்லை. நான் உனக்குத் துணையாக நிற்பவள்...நிச்சயமாக எங்களுக்குப் பெரிய வெற்றிதான்..."

அம்மாவும், அப்பாவும்திகைத்து நின்றார்கள். தம்பி வேதாவின் கண்களில வழிந்த வேதனைக் கண்ணீரை வனிதா துடைத்துவிட்டதும் மீண்டும் அது ஆனந்தக் கண்ணீராக வழிந்துகொண்டிருந்தது ஒரு புதிய யுகம் பிறக்கப்போவதை அவர்கள் இருவரும் இணைந்து நின்ற காட்சி பறை அடித்துச் சொல்லிக்கொண்டிருந்தது.

(யாவும் கற்பனை)

## நெடுந்தீவுப் பங்கில் கத்தோலிக்க ஆசிரியர் சங்க பொதுக்கூட்டம்

நெடுந்தீவுபபங்கின் கத்தோலிக்க ஆசிரியர் சங்கத்தின் முதல் பொதுக்கூட்டம் 19-2-89 காலை 10 மணிக்கு றோ க. பெண்கள் பாடசாலை மண்டபத்தில் தலைவர் A. W. அரியநாயகம் (நெ. மகா. / வி அதிபர்) தலைமையில் கூடிற்று. தலைவர் தமதுரையில் கத்தோலிக்க ஆசிரியர்கள் ஆகிய நாம் மரக்குற்றயின் கீழ் வைக்கப்பட்ட விளக்காக இருக்காமல் ஒளிதரும விளக்காக இருக்க வேண்டுமென கேட்டுக்கொண்டார்.

அருள்செல்வி லொறன்றினோ பேசுகையில் (றோ. க. பெ. பாட. அதிபர்) கத். ஆசிரியர்கள் ஆகிய யாம் முதலில் பிள்ளைகளுக்கு எல்லா விதத்திலும் முன்மாதிரியாக இருக்க வேண்டுமெனவும் நாம் உருவாகிக்கொண்டு மற்றவர்களை உருவாக்க வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். சிறப்புரை ஆற்றிய அருள்செல்வன் சேவியர் கருணாரத்தினதனது சொற்பொழிவில் இறைவனின் திட்டம் நிறைவேற நாம் கருவியாக இருத்தல் வேண்டுமென கேட்டு மறைக்கல்வியை கற்பிக்கும் முறையில் புதிய யுக்திகளை ஆசிரியர்கள் கையாளவேண்டுமெனவும் நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும், இறைவனின் அன்பும் பரிசுத்த ஆவியின் வழிநடத்தலும் இருக்க வேண்டிய கல்வியே ஒரு மறைபரப்பு என சூளுரைத்தார். பங்குத்தந்தை தனதுரையில் ஆசிரியர் பணியும் ஒரு விதமான அழைத்தல் எனவும் இறைவன் தமக்களித்த ஆற்றலை மக்களுடன் பகிர்ந்தளித்து உண்மையின் ஒளியை மாணவ சமுதாயத்துக்கு காட்ட வேண்டுமென கேட்டுக்கொண்டார். இறுதியாக செயலாளர் M. S. ஒக்ஸ்வேல்ட் (ஆசிரியர்) தனதுரையில் மக்கள் மத்தியில் தேவ அழைத்தல்கள் மிகவும் மருருவிவிட்டது. இது ஒரு வேதனை தரும் விடயமென்றார்.

தகவல்: நெடுநகர்நேசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளி ஏற்று உன் கரத்தால்!

காலங்களும் நேரங்களும் கண்மூடி விழிக்க முன்னர் மின்னலைப் போல் புரண்டோடிக் கொண்டிருக்கும் இக் கால கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நீ உன் குறிக்கோளை மறந்து விட்டாயா? இலட்சியப் பாதையில் வீறு நடை போட வேண்டிய நீ இலட்சியப் போக்கையே மறந்து வாழ்கின்றாய் இந்த விஞ்ஞானயுகத்திலும் மெய்ஞானம மறந்து வஞ்சகம் செய்யும் வாழ்வினை மாற்றவில்லையே மற்றவனை வாழவைக்க வேண்டிய நீ மாற்றானின் வாழ்வினைப் பறிக்கின்றாயே. ஏன் இன்றும உன்சிறப்பு நிலையை மறந்து சீர் குலைந்த நிலைகளாகிய களவு, கொலை, கற்பழித்தல் எனும் தீய நிலைகளை களைந்தெறிய வில்லை? காரணம் என்ன? இளைஞா! இருளான உலகினை ஒளியேற்ற வேண்டிய நீ மீண்டும் இருளவைப்பதன் காரணம் என்ன? உலகை ஆக்கப்பாதையில் வழிநடத்த வேண்டிய நீ அழிவுப்பாதையில் நடத்துவதன் காரணம்! ஏன் இவ்வாறு தயங்கிப்பின் வாங்குகின்றாய் உலகம் உன்கையில் இருப்பதை மறந்து விட்டாயா? நீயே இவ்வாறு உன் பொன்னான வாழ்வை மண்ணாக சிதறடித்து வாழ்ந்தால் உன் அடியைப் பின்பற்றும் ஏனைய சமுதாயம் எவ்வாறு வாழப் போகின்றது. சற்று சிந்தித்துப்பார் சிந்திக்கின்றாயா? அல்லது சிந்திப்பது போல் தூங்கி விட்டாயா?

ஆம்! இளைஞா இன்னும் விழிக்கவில்லையா? நெடுநேரமாகத்தூங்குகின்றாயே நேரம் பொன்னானது என்னும் முன்னோர் வாக்கை மறந்து விட்டாயா? அல்லது மறைத்து விட்டாயா? இவ்வளவு காலமாக தூங்கிக் கொண்டிருக்கும் உன் இலட்சியப் போக்கை தட்டி அருட்டிவிடு உன் இலட்சியப்பாதையில் கல்லும் முள்ளும் ஊறு செய்கின்றன வென்று அவற்றைக் கண்டு தயங்கிப் பின்வாங்கி அப்பாதையை மாற்றாதே. மாறாக அவற்றை யெல்லாம் களைந்து விட்டு முகமலர்ச்சியுடன் முன்னே நட.

ஆம் சகோதரா! சற்றேவிழித்தெழு! காலம் தாழ்த்தாதே இருண்ட உலகினை ஒளிமயமாக்கு. இறைவனை நம்பி அவருடன் ஒன்றித்து வாழ்!

''கடவுளை நம்பினோர்
கைவிடப்படார்''

யோசவ், டெனிஸ்லாஸ்
அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை

---

அ. ம. தி. குருமடம்
கொழும்புத்துறை
31-3-1989.




'அன்பு இளம் உள்ளங்களுக்கு'

''கிறிஸ்து உயிர்த்தெழவில்லை என்றால் எங்கள் தூதுரை பொருளற்றதே உங்கள் விசுவாசமும் பொருளற்றதே''
(1 கொரி. 15/14).

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே உலக மக்கள் அனைவரதும் மீட்பை உறுதிப்படுத்தும் நிகழ்வாக அமைகின்றது. கிறிஸ்துவின் பாடுகள், மரணம் அனைத்தும அவரது உயிர்ப்பிலே முற்றுப்பெறுகின்றது

இருளினறு ஒளிக்கு—
பொய்மையிலிருந்து
மெய்மைக்கு—
சாவிலிருந்து வாழ்விற்கு—

மனிதன் கடத்தப்படல் கிறிஸ்துவின் உயிர்ப்பினாலே சாத்தியமாகின்றது. பாவத்திற்கு அடிமையாகி வாழ்ந்த மனித இனத்தின் முழுமையான விடுதலை கிறிஸ்துவின் உயிர்ப்பினாலே நிறைவு பெறுகின்றது.

உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் மகிழ்விலே நாமும் பங்கு கொள்ள பற்பல அடிமைத் தனங்களிலிருந்து விடுதலையடைய வேண்டியவர்களாயுள்ளோம். எம்மை நாமே பெரியவர்கள் என எண்ணக்கொள்வதிலிருந்து ஆணவம், அகம்பாவம் போன்ற துர்க்குணங்களினால் மனித மனங்களைப் புண்படுத்துவதிலிருந்து, ஆவலாதி, அவதூறு பேசி மனிதரின் நல்ல பெயரைக் கெடுப்பதிலிருந்து நாம் விடுதலையடைய வேண்டியவர்களாயுள்ளோம்.

அல்லேலூயா வாழ்த்துக்கள்.

அன்பு நெஞ்சன் வி. பி.

---

## குருசுமுத்தண்ணையின் கிசு கிசு-35

அடைக்கலம்: நாங்க வேதக்காறர் எண்டு இண்டைக்கு திருவிழாவிலதான் தெரியுமாம் எண்டு கந்தோர் பெரியவர் சொன்னார் அண்ணை.

குருசுமுத்து: தம்பி கோயிலில் காணேக்க மட்டும் வேதக்காறர் எண்ட நிலையில் வாழக்கூடாது தம்பி.

அடைக்கலம்: அப்ப எப்பிடி அண்ணை அவையளுக்கு தெரிய வாய்ப்புண்டு?

குருசு—ஓம், ஓம் இப்பதான் பேரிலையும் பிடிக்க ஏலாது. அது மாதிரி உங்கட கடைமையளை சரிவர செய்து மற்றவர்களுக்கு லஞ்சம் வாங்காம உதவிறதால, பாத்து கிறிஸ்து—அவன் எண்டு சொல்லேக்க அதில தான் நீயும் கிறிஸ்துவின் சாட்சியாய் வாழுகிறாய் தம்பி.

---

## முளைக்கின்ற மனங்கள்

மனித மனம் எப்போதும் ஒன்றையே நினைத்துக்கொண்டிருந்தால் இன்று எத்தனையோ சக்திகள் உலகில் தோன்றியிருக்காது என்பது உலகறிந்த உண்மை. வெவ்வேறு சிந்தனைகளுக்கும், ஆராய்ச்சிகளுக்கும் மனத்தை அலையவிட்டதினாலே தான் இன்று புதிய கண்டுபிடிப்புக்கள், தோன்றின. எனவே மனித மனமானது ஒன்றிலே தேய்ந்துபோக அடுத்ததிலே வளர்ச்சி காண்கிறது. ஒன்றிலே துன்பத்தை ஏற்றால் மற்றதில் இன்பத்தைத் தேடுகின்றது உதாரணமாக ஒரு மாணவன் இன்று படிக்கவேண்டும் என்று நினைத்து முழுநாளும் படிப்பிலேயே கவனம் செலுத்தினால் அவனது மூளைக்கு ஓய்வு இல்லை. உடலுக்கு உறுதி கொடுக்க விளையாட்டு இல்லை. இதனாலே ஒரே சிந்தனையை விட்டு எல்லா விதத்திலும் மனதை அலைய விட்டு அதாவது மனதினை ஒன்றிலே மடியவைத்தால் அடுத்ததிலே முளைக்க வையுங்கள்.

D E. ரட்ணராஜ்
இளவாலை.

---

## இளைஞனே நீ மாறவேண்டும்

இளைஞனே நீ மாறவேண்டும்
தோல்விகள் தானாக வருவதில்லை—இளைஞனே
சோர்ந்து வாழ்வதால்
பிரயோசனமில்லை.
ஏற்றத்தை தேடியே
ஏறவேண்டும்— இளைஞனே
எம்மை நாமேயே
மாற்றவேண்டும்.
வாழ்க்கையில் வரலாறு
படைக்கவேண்டும்—
இளைஞனே
வாழ்வில் ஒளியை
ஏற்றவேண்டும்.
உண்மைக்குத் தலை
வணங்கவேண்டும்—
இளைஞனே
அநீதிக்கு எதிர்ப்பு
அளிக்கவேண்டும்.
உறிஞ்சுவோரை உதறித்
தள்ளவேண்டும்—இளைஞனே
வலிமையான கரங்களைக்
காட்டவேண்டும்.
மனித வாழ்வுக்காக
வாழவேண்டும் — இளைஞனே
மனித தர்மங்களை
மீட்கவேண்டும்.
உண்மை வாழ்வுக்குப்
போராடவேண்டும்—
இளைஞனே

அ. ஜெனி

---




## ஆடம்பரச் செலவு

வாழ்க்கை என்றால் ஆடம்பரம் வேண்டும் ஆடம்பரம் இல்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? என மனிதன் எண்ணுகிறான். நவீன ஆடம்பரத்தை நாம் பட்டணங்களிலும், நகரங்களிலும் காண்கிறோம் பகட்டான வாழ்வு தேவை, அவ்வாழ்வுதான் அனைவராலும் போற்றப்படும் வாழ்வு என மனிதன் கூறி தன் ஆடை, வாகனங்கள், வீடுகள் வீட்டில் தன் இன்பத்திற்காக உபயோகிக்கும் அனைத்து இன்பச் சாதனங்களில் பணத்தைச் செலவழிக்கிறார்கள் ரேடியோ, டேப் ரிக்கார்டர், மின் விசிறி, குளிர்சாதனப்பெட்டி, குளிர் அறை, நவீன குளியல் அறை, தொலைப்பேசி, தொலைப்படக்காட்சி (Television), விலையுயர்ந்த மெத்தைகள், அழகை மிகைப்படுத்தி மனதைக் கொள்ளை கொள்ளும் மேலை நாட்டுப் பொருட்கள், உயர்வகைக் கைக்கடிகாரங்கள், நகைகள் இன்னும் ஏராளமான வழிகளில் மனிதன் பணத்தை விரயமாக்குகிறான். இவ்வெறியின் காரணமாகச் சில வேளைகளில் தன் நிலைமைக்கு மிஞ்சிய முறையில் செலவழித்து வறுமைப் பிடியில் சிக்குண்டு தவிக்கிறான்.

''விரலுக்குத் தக்க வீக்கம்'' – என்பார்கள். வரவுக்குத் தக்கபடி செலவு செய்ய வேண்டும். ''வரவு எட்டணா செலவு பத்தணா'' என்றால் துண்டு விழும் இரண்டணாவுக்கு எங்கே போவது? எனவே வரவுக்கு தகுந்தபடி செலவு செய்ய வேண்டும்

வீட்டில் இருக்கும் பெண்கள் சிலர் பக்கத்து வீட்டுப் பெண்பட்டுச் சேலை உடுத்தி இருக்கிறாள் எனக்கும் அதேபோல் சேலை வேண்டும் என்று கூறி பிடிவாதம் பிடிப்பார்கள். கணவன் உத்தரவு இல்லாமல் சிலர் தங்கள் மனம் போல் துணிமணிகளும், மற்றும் பொருட்களும் வாங்குவதுண்டு. இவ்வாறு அளவுக்கு மீறி பெண்கள் செலவை இழுத்து விட்டுவிடுவதுண்டு. ஆடம்பரத்துக்குத் தூண்டும் மனைவியைக் கணவன் கண்டித்து வரவுக்குத் தகுந்த செலவு செய்யத் திட்டமிட வேண்டும். ''செக்களவு தங்கம் இருந்தாலும் செதுக்கி செதுக்கித் தின்றால் எத்தனை நாளைக்கு இருக்கும்?''

தனது வீட்டில் நடக்கும் திருமணம் போன்ற விழாக்களை பக்கத்து வீட்டார் வாயாரப்புகழ வேண்டும்; அடுத்தவனைவிட நாம் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என எண்ணும் ஒருவன் கடன் வாங்கி, ஒலி பெருக்கி, பெரிய பந்தல்கள் தோரணங்கள், விருந்துகள், ஆட்டங்கள் எல்லாம் வைத்து நடத்துவான் விழா முடிந்த மறுநாளே கடன் கொடுத்தவர் வந்து 'வாங்கிய பணத்தை உடனே திருப்பித்தரவேண்டும்' என்று கழுத்துப்பிடியாக பிடிக்கும் போதுதான் தன் குற்றத்தை உணருகிறான். விழாச் சிறப்பைப் பார்த்து ஆச்சரியத்தோடு நோக்கியவர்கள் இப்போது எள்ளி நகையாடும் போது இவன் மானம் கப்பலேறுகிறது.

மனிதனுக்கு எதிர்பாராத செலவுகள் வரநேரிடும். எதிர்கால வாழ்வுக்கோ அல்லது ஏதாவது முக்கியமான காரியத்துக்கோ பணம் தேவைப்படும் என்று தனது செல்வத்தை வீண் ஆடம்பரத்தில் செலவு செய்யக் கூடாது தகுந்த இடத்தில் முதலீடு செய்ய வேண்டும். தன்னிடத்தில் அளவுக்கு மீறி பணம் இருந்தால் அதை நன் முறையில் பயன்படுத்த வேண்டும். ஒவ்வொருவரும் சேமிப்புப் பழக்கத்தைக் கைகொள்ள வேண்டும் 'சிறு துளி பெருவெள்ளம்'' என்பார்கள். சிறுக சிறுக சேமித்து வைத்தால் அது பெரும் தொகையாக மாறும் நமக்கு பிற்கால வாழ்வுக்கு அதிக முதலீடு தேவைப்படும் போது நாம் சேமித்து வைத்த பணம் நமக்குக் கை கொடுத்து உதவுகிறது.

குடும்பம் ஆலமரம் போல விழுதுவிட்டு செழித்து வளர வேண்டுமானால் நல்ல சூழ்நிலை தேவை. பெரிய ஆலமரமானது அரசன் தனது பெரிய சேனையோடு வந்து தங்குவதற்குக்கூட நிழல் கொடுக்கும். அதுபோல குடும்பமும் பலர் வாயாரப் போற்றுவதற்கேற்ப அமைய வேண்டும். குடும்பம் பண்பை வளர்க்கும் ஆலயமாகத் திகழ வேண்டும். குழந்தைகள் நன்றாக வளர வேண்டுமானால் குடும்பத்தில் அமைதியான சூழநிலை வேண்டும். அமைதி, சகோதர அன்பு, மனநிறைவு கொண்ட குடும்பச் சூழ்நிலையில் வளரும் பிள்ளைகள் நல்ல பண்பு கொண்டவர்களாக இருப்பர் என்பதில் ஐயமில்லை.

''அளவோடு செலவு செய்து
வளமோடு வாழ்வோம்''

நன்றி—தோழன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருள்வாக்கு அறிவோம்

திருமறைப்பணி நிலையம்
த. பெ. இல. 2.
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.

## நன்றி உணர்வு

மக்களின் விண்ணப்பங்களை எடுத்துவர ஒரு வானதூதரையும், மக்களின் நன்றியறிதலைப் பெற்றுவர மற்றொரு வானதூதரையும் இறைவன் இவ்வுலகத்திற்கு அனுப்பினாராம். விண்ணப்பங்களை எடுத்துச் செல்லவந்த வானதூதர் சுமக்க முடியாமல் பெரிய மூட்டையைத் தூக்கிச் சென்றாராம். ஆனால் நன்றியறிதலைப் பெற்றுவர வந்த வானதூதர் ஒரு சிறியபையை எடுத்து வந்தாராம். இது வெறும் கதை மட்டுமல்ல, உண்மைதான் என்பதை எண்பிக்கின்றது நற்செய்தி.

இயேசுவிடம் குணம் வேண்டி பத்து தொழுநோயாளிகள் விண்ணப்பித்தனர். ஆனால் நன்றி செலுத்தியவனோ ஒருவன் மட்டும் தான். பத்துக்கு ஒன்று என்ற விகிதத்தில்தான் மனிதர்கள் இறைவனுக்கு நன்றி செலுத்துகின்றனர். சகாயமாதா பீடத்தில் உள்ள விண்ணப்பப் பெட்டியில் 100 விண்ணப்பங்கள் இருந்தால், நன்றியறிதல் பெட்டியில் 10 நன்றிக் கடிதங்கள் மட்டுமே இருக்கும்!

நன்றி மறப்பது நன்றல்ல; செய்நன்றி மறந்தவனுக்கு உய்வில்லை; உப்பிட்டவரை உள்ளளவும் நினை; பிறர் உனக்குத் தினையளவு நன்மை செய்தாலும், அதைப் பனை அளவாகக்கருதி பாராட்டவேண்டும் என்று நீதி நூல்கள் நமக்கு எடுத்துரைத்தும் நமது உள்ளம் நன்றி உணர்வில் தோய்வதில்லை 'தென்னையைப் பெத்தா இளநீரு, பிள்ளையைப் பெத்தா கண்ணீரு' என்று பாடும் அளவுக்கு பிள்ளைகள், பெற்றவர்கள் மனம் குளிர நன்றிப்பால் வார்க்காமல் நன்றி கெட்ட செயல்களால் பெற்றோர்களின் கண்களைக் குளமாக்குகின்றனர்.

### அறிந்துகொள்ளுங்கள் 71

## பாவப்பரிகாரப்பலி

லேவியராகமத்தில் பரிகாரப்பலி செலுத்துவது பற்றி பல அதிகாரங்களில் கூறப்படுகின்றன குறிப்பாக 4-ம் 5-ம், 6-ம், அதிகாரங்கள் இவை பற்றிக் கூறுகின்றன. ஒருவன் ஆண்டவர் கட்டளையிட்டவைகளில் ஒன்றைத் தெரியாமல் மீறிப் பாவம் செய்யும் போது ... குருபாவம் செய்து அதனால் மக்களைப் பாவத்திற்கு உட்படுத்தும் போது (லே 4:2-5) அப்பாவத்திற்காகப் பரிகாரப்பலி செலுத்த வேண்டும். இங்கு குறிக்கப்பட்ட பாவம் அகந்தையினால் துணிந்து செய்யப்பட்டதன்று. ஏனெனில் அப்பாவத்திற்கு சாவுதான் தண்டனை (எண் 15:30 31) இங்கு குறிக்கப்படும் பாவம் ஆத்திரத்தால் செய்யப்படும் குற்றங்கள், அல்லது அபிஷேகம் செய்யப்பட்ட குருக்களுடைய தூய்மையின்மையால் பலி செலுத்தத்தகுதியின்மை போன்ற பாவங்களுக்குப் பரிகாரமாகப் பலி செலுத்தப்பட்டது

இப்பலியில் பரிகாரம் முதன்மைபெறுகிறது. எனவே இதற்கு இரத்தம் பயன்படுகிறது. தனிப்பட்ட ஒருவனுக்காக பாவப்பரிகாரப்பலி செலுத்தப்பட்டால் பலி மிருக இரத்தம் பலிப்பீடக்கொம்புகளில் தெளிக்கப்பட்டது (லேவி 4:27-31). குருக்களுக்காக அல்லது மக்கள் சமூகத்திற்காக பாவப்பரிகாரப்பலி செலுத்தப்பட்டால் பலிமிருகஇரத்தம் தூயகத்திற்குக் கொண்டுவரப்பட்டு தூயகத்திற்கு முன தொங்கும் திரையில் ஏழுமுறை தெளித்து பின் அருத்தூயகத்திற்குள் எடுத்துச் செல்லப்பட்டு உடன்படிக்கைப் பேழையின் மேலும் தெளிக்கப்பட்டது. (லேவி 4:13-20).

பலி மிருகத்தின் கொழுப்பும் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளும் பலிப்பீடத்தின்மேல் எரிக்கப்பட்டன (லே 4:8 10) மீதிப்பகுதிகளை கூடாரத்திற்கு வெளியே சாம்பல் கொட்டும் இடத்தில் எரித்தனர். (லேவி 4:11-12).

குற்றப்பலியும் பாவப்பரிகாரப் பலிபோன்றே நடைபெற்றது. ஆனால் இங்கு பலிப் பொருளின் மீதிப்பகுதி குருக்களுக்கு உரியதாகும். இந்தப்பலிக்கு செம்மறி ஆடுபோன்ற சிறு மிருகங்கள் பயன்படுத்தப்பட்டன. இப்பலி பிறருடைய பொருட்களை கவருதல் அல்லது ஊறு செய்தல் போன்ற குற்றங்களுக்காக செலுத்தப்பட்டது இந்த தண்டனையும் பொருளுக்கு ஈடுசெய்தலும் அடங்கும். தண்டனை கவர்நத ஊறு செய்த பொருளின் விலையில் ஐந்தில் ஒரு பாகமாகும்.

சமாதானப் பலியின் சிறப்பு கொழுப்புப் பகுதிகள் எரிக்கப்பட்டபின் பின்னங்கால்கள் குருவுக்குக் கொடுக்கப்பட்டு மீதி இறைச்சி பலியுணவில் பயன்படுத்தப்பட்டன. பலி கொடுத்தவரின் குடும்பம் முழுதும் இவ்விருந்தில் பங்குபெறுவர்.

இ. ம. ஜெயசீலன்

## பழமொழி ஆகமமும் புதுமொழியும்.

வாசகர்களே!

நம் முன்னோர் நல்லவர்களின் அறிவுரைப்படி நட. அவர்களின் வாழ்வைப் பின்பற்று. அவர்களின் வாழ்வு உனக்கு முன்னோடியாக இருக்கட்டும் என்று கூறிப்போந்தார்கள் அன்றுடம் பலரின் பேச்சுக்கள் அறிவுரைகளைக் கேட்கின்றோம். அவர்களின் நல்வழிப்பாதைகளைக் கண்டு வியக்கின்றோம். அவர்களைப் பின்செல்ல வேண்டுமென்று துடிக்கின்றோம்.

ஆனால் எமதுமனது ஒரு ஆற்றங்கரைக் தரங்கு தீர்மானங்கள் உடனே ஆற்று வெள்ளத்தோடு அடிபட்டுப்போய் விடுகிறது.

15/20 ல் "ஞானமுள்ள மகன் தன் தந்தையை மகிழ்விக்கிறான் மதி கெட்டமகன் தன் தாயை இகழ்கிறான்"

இப்படி மதிகெட்டு அலையாத தடுமாறாத வாழ்வு வாழ வேண்டி நம் இளைஞர்களைப் பார்த்து ஆன்றோர் கூறும் புதுமொழி.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம். 'மாதா, பிதா, குரு தெய்வம்" என்ற மூன்று அடுக்கில் தாயையும் தந்தையையும் நேசியாதவன் தெய்வத்தை அறியாதவன். கண் கண்ட தெய்வங்களே நம் பெற்றோர்தான் என்பதை தெளிவுறுத்துகின்றார்கள் நம் முன்னோர்கள்.

தொடர்ந்து அரசியலையும் தொட்டுப் பார்க்கின்றார் நம் திருநூல் ஆசிரியர்.

அரசியல் சிறக்க ஆலோசனையாளனே முக்கியமானவன். "மதிகெட்ட மந்திரி வாழும் நாட்டில் மன்னரின் ஆட்சி நிலைக்காது" என்ற முதுமொழிக்கு புதுமொழி தருகிறார். மேற்பாகத்தில் 15/22-ல் "ஆலோசனை எங்கே இல்லையோ அங்கே சிந்தனைகள் சிதைந்து போகின்றன. சந்திப்போர் எங்கே அதிகமோ அங்கே சிந்தனைகள் வலுப்படுகின்றன"

பொருத்தம் எப்படி?

இன்னும் ஒன்றைக் கேளுங்களேன்.

நமது நாவு ஒரு நெருப்பு என்றார் புனித யாகப்பர். உண்மைதான். தீமையையும் சுட்டெரிக்கும். நன்மைத்தனங்களையும் அது நிர்மூலமாக்கும். இதையே வள்ளுவரும "யாகாவார் ஆயினும் நா காக்க- காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்கப்பட்டு"

இவற்றுக்கெல்லாம் பதிலடி-எதிரடி கொடுக்கிறார், திருநூல் ஆசிரியர். எப்படி என்று கேளுங்களேன்.

15/23 இல் "மனிதன் தன் வாயின் வாக்கில் மகிழ்கிறான். காலத்திற்கேற்ற உரையே சிறந்ததாம்."

### வாரம் ஒரு சிந்தனை

"பேசாத வார்த்தைக்கு நீங்கள் எஜமான் பேசிய வார்த்தை உங்களுக்கு எஜமான்."

உங்கள் அன்பன்
எஸ். ஏ. நாகர்.

# காவலன் கண்மணிகள்

| | |
|---|---|
| ஒளி: 3<br>சுடர்: 13 | எம் விழிகளின் ஒளி யேசு<br>எம் வாழ்வின் வழி யேசு |

### வாரம் ஒரு வார்த்தை

ஆண்டவரே என் ஒளி,
ஆண்டவரே என் மீட்பு,
நான் யாருக்கு அஞ்சவேண்டும்.

சங். 26! 1.

* * *

### தொண்டன் (தொடர்ச்சி)

(நாடகம்:)

### காட்சி 2 :

இடம்: மோகனின் சைக்கிலுக்கு காற்றுப் போய்விட்டது. சைக்கிலுக்கு காற்று அடிக்கச் சைக்கில் கடைக்குச் சென்றான். சைக்கில் கடையில்...........

மோகன் மனச்சாட்சி:

மோகன்! நீ அப்பா சொல்லை ஏன் கேட்கவில்லை? கிறிஸ்து கால் கழுவிய நாள்! வரலாற்றில் என்றுமே நித்தியமான உயிருள்ள உணவை, மனித குலத்துக்குத் தந்த நாளை! நீ மறந்து செல்கிறாயே? ஏன்?

கிறிஸ்துவுடன் சேர்ந்திருந்து காட்டிக்கொடுத்த யூதாசுக்கும் உனக்கும் என்ன வித்தியாசம்? அவன் காசுக்காகக் காட்டிக் கொடுத்தான் நீ ஒரு களியாட்டத்துக்காக! இந்த நாளில் மரணத்தின் பிடியில், பிணங்களின் மத்தியில், அமைதியற்று வாழும் நாளில் பிறந்தநாள் விழாக்கள் தேவையா? யேசுவின் தியாக வாழ்வின் உன்னத இலட்சியத்தைப் புரிந்து கொள்ளும் இப்புனித வழிபாடு தேவையா! எது தேவை? மோகன்! மோகன்!! சிந்தி! சிந்தி!

மோகன்: நிறுத்து போதும் நிறுத்து போதும் !!

சைக்கிள் கடைக்காரன்: தம்பி நான் நிறுத்திவிட்டேன். இதுக்கேன் தம்பி கத்துறாய். (மோகன் தன்னிலை உணர்ந்தான். ரவி வீட்டுக்கு விரைந்தான்)

மோகன ரவி: இந்தா! கஸட்.

ரவி: ஏன் ஒரு மாதிரியாய் இருக்கிறாய்?

மோ: ரவி எனக்கு இப்ப நிற்க நேரமில்லை. நான் கோயிலுக்குப் போகவேணும் என்னை மன்னியடா. (ரவியின் கையைத தொட்டுச் சொன்னான்.)

ரவி: (மோகனின் தோளில் தட்டி) கவலைப்படாதே! என்ர பேத்டே பாட்டி கான்சல்.

மோ: ஏன்? ஏன்? என்ன நடந்தது.

ரவி: சோசலிஷம் பேசும் நாங்கள் மற்றவர்க்கு முன்மாதிரியாக வாழ வேண்டாமா? விழாவுக்குச் செலவழிக்க இருந்த பணத்தை வேறொரு வழியில் பயன்படுத்த நினைத்துள்ளேன்.

மோ: என்ன வழியடா அது?

ரவி: எங்கள் மண்ணில் நிகழ்ந்த அனர்த்தங்களால் அநாதைகளாகிவிட்ட பிஞ்சு உள்ளங்களைப் பேணிக்காக்கும் புனித இல்லத்திற்கு அனுப்பவுள்ளேன். அது மாத்திரமல்ல ஒவ்வொரு ஞாயிறும அக்குழந்தைகளுடன் எங்கள் அன்பையும், அறிவையும் ஆற்றலையும் பகிர்ந்து வாழ முடிவுசெய்துள்ளேன். நீயும் என்னுடன் வருவாயா?

மோ: ரவி நீதானடா உண்மைத் தொண்டன். உன்வழி, என் வழியடா. வருகிறேன்.

(குழந்தையும் தெய்வமும்...என்ற பாடல் வானொலியில் ஒலித்தது.) "வணக்கம்"

### உன் வாழ்வு

★ இருளான உலகில் உன் வாழ்வு ஒளியாக வேண்டும்.
★ சுயநல உலகில் உன் வாழ்வு பொதுவாக வேண்டும்.
★ பகையான உலகில் உன் வாழ்வு பாசமாக வேண்டும்.
★ மாசுள்ள உலகில் உன்வாழ்வு உறைபனியாக வேண்டும்.
★ வம்பான உலகில் உன் வாழ்வு அன்பாக வேண்டும்.
★ அழிக்கிற உலகில் உன் வாழ்வு உருவாக வேண்டும்.

யா. யூலன் குரூஸ் A/7.
பேசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைஞர் ஒன்றுகூடல்

யாழ். புனித மரியன்னை பேராலய
இளைஞர் உருவாக்கல்
இயக்கத்தினரால் நடாத்தப்படும்
இளைஞர், இளம் பெண்களுக்கான
வருடாந்த ஒன்றுகூடல்

காலம்:- 09-04-89 ஞாயிறு வாரம்
நேரம்: காலை 9-00 — மாலை 5-30 வரை.
இடம்:- வண. மத்தியூஸ் அடிகள் மண்டபம்
புனித பத்திரிசியார் கல்லூரி, யாழ்ப்பாணம்.
பிரதம அதிதி:- மகாவந்தனைக்குரிய வ. தியோகுப்பிள்ளை
ஆண்டகை அவர்கள் — யாழ். ஆயர்
சிறப்புரை:- "தன்னுணர்வில் கிறிஸ்தவனின் வளர்ச்சி"
வண. கலாநிதி. சா. ம செல்வரட்ணம்
(கரவையூர்ச் செல்வம்) அ. ம. தி. அடிகள்

யாவருக்கும் பலன்தரும் பல்சுவை நிகழ்ச்சிகள், அறிவுப் போட்டிகள், கலை கலாச்சார நிகழ்ச்சிகள், மற்றும் பரிசில்கள் காத்திருக்கின்றன.

அனைவரும் வருக! பங்குபற்றி பயன் பெறுக!!

இளைஞர் உருவாக்கல் இயக்கம்,
புனித மரியன்னை பேராலயம்,
த. பெ. எண். 02
யாழ்ப்பாணம்

A/63

## அன்பர்களுக்கு அறிவித்தல்

எம்மிடம் மெழுகுதிரி, செபப்புத்தகம், செபமாலை, வரவணிக்கம், படங்கள், குமஞ்சான், தோலகட்டி நெல்லி இரசம் கிடைக்கும்.

கிடைக்குமிடம்:
புனித சிந்தாத்திரைமாதா
செபமாலை ஸ்ரோர்ஸ்,
140, சுருவில் வீதி,
கரம்பொன், ஊர்காவற்றுறை.

## 31-ம் நாள் நினைவு அஞ்சலி



அருட்சகோதரர்
R. L. றெபேட் S. S. J.
(முன்னைநாள் ஆசிரியர்
கார்மேல் பாத்திமாக் கல்லூரி
கல்முனை)

மண்ணகம்: 02-02-1928 விண்ணகம்: 06-03-1989

"வாழ்வில் எம்மை
நேசித்தீர்கள்
மரணத்திலும் உம்மை
மறவோம்"

கருணை நிறைந்த கர்த்தாவே! முடிவில்லாத பிரகாசம் இவர் மேல் பிரகாசிக்க இவர் சமாதானத்தில் இளைப்பாறுவாராக.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக 05-04-1989 புதன் கிழமை காலை 7-30 மணிக்கு காங்கேசன்துறை ஊறணி புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலிப்பூசை நிறைவேற்றப்படும்.

பிரிவால் துயருறும்:
சகோதரர், மைத்துனர்,
மருமக்கள், பெருமக்கள்.
ஊறணி,
காங்கேசன்துறை. A/62

## விண்ணக வாழ்வின் முதலாண்டு நினைவாஞ்சலி

03-04-1989



திருமதி மரியப்பிள்ளை யோசெவ்

அன்னை மடியில்: 28-03-1898 இறைவனின் அடியில்: 03-04-1988

"உங்கள் உயிர் கிறிஸ்துவோடு கடவுளுக்குள் மறைந்துள்ளது" (கொலோ 3, 3)

செபம்

பரிசுத்த தந்தையே! அனைத்துக்கும் ஆதிகாரணரான இறைவா! இன்னல்கள் நிறைந்த இவ்வுலகிலிருந்து உம்மால் அழைத்துக் கொள்ளப்பட்ட உமது அடியாள் மரியப்பிள்ளை யோசவுக்கு முடிவில்லா இளைப்பாற்றியை அளித்தருளும். சோதிமிகுந்த உமது ஒளியில் அவரது ஆன்மாவை நிறைத்தருளும். உமது திருக்குமாரனும் எங்களாண்டவருமான கிறிஸ்து வழியாக உம்மை வேண்டுகிறோம்.

ஆமென்.

இவரது ஆன்ம சாந்திக்காக கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்திலும், யாழ். அடைக்கலநாயகி ஆலயத்திலும், யாழ். திருக்குடும்பக் கன்னியர்மட ஆலயத்திலும், பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலயத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்:
சகோதரர்கள்,
மேன்மைதங்கிய ஆயர்
வ. தியோகுப்பிள்ளை,
சங். சகோதரி மேரி எமிலி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.
ஒழுவில் வீதி,
கரம்பொன்,
ஊர்காவற்றுறை. A/57

## விண்ணக வாழ்வின் 4ஆம் ஆண்டு



அ. சத்தியசிலன் (சத்தி)

அன்னை மடியில்: 03-04-1966 ஆண்டவன் அடியில்: 04-04-1985

"மண்ணில் விதைக்கப்பட்டாய் விண்ணில் விருட்சமாவதற்கு"

இவரின் பிரிவில் துயருறும்:
பெற்றோர், சகோதரங்கள்,
உறவினர், நண்பர்கள்
சுண்டிக்குளி,
முருங்கன். A/61

## 31-ம் நாள் நினைவஞ்சலி



தோமஸ் பே(B)ட்டி
அலோசியஸ்

மலர்வு: 2-12-1935 மறைவு: 22-2-1989

உயிர் வாழ்க்கையில்
உம்மை அன்பு செய்தோம்
மரணத்திலும் மறவோம்

எம் ஆண்டவராகிய யேசுவே! உமது அடியானாகிய பே(B)ட்டியின் பாவங்களைப் பொறுத்தருளும் உமது அன்புப் பராமரிப்பில் நித்தியத்திற்கும் காத்தருளும்.

இவரின் ஆன்ம சாந்திக்காக 28-3-89 செவ்வாய்க் கிழமை காலை 6-30 மணிக்கு மாதகல் புனித அந்தோனியார் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டது.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், தாய்,
சகோதரர்
"சாந்தி"
மாதகல் A/56

## விசுவாசத்தை...

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையிலேயே அவருடைய பயணம் ஒரு ஆத்மீகப் பயணமாகத்தான் இருந்தது.

பங்குனி 10-ம் திகதி நடந்த கருத்தரங்கில், அனுபவங்கள், நிறைந்தவரான சுவாமி ஜெயசீலன் "திருச்சபையும் இறைவாக்கும்" என்ற தலைப்பில் தனது அனுபவங்களுடன் கூடிய ஒரு கருத்துச் செறிவு நிறைந்த உரையை ஆற்றினார்.

பயணம் செய்து கொண்டிருக்கின்ற திருச்சபையிலே இறைவாக்கு இன்றியமையாத ஒன்று என்றும் திருச்சபையானவள் இறைவாக்கைப் பயன்படுத்துவதிலே அதிக அக்கறை எடுக்க வேண்டும் என்றும், திருச்சபையிலே அங்கம் வகிக்கின்ற ஒவ்வொருவரும் இறைவாக்கை வீடுகளில் வைத்திருக்க வேண்டும் என்றும், அதைத் தினமும் வாசித்து காலத்தின் கோலத்தை அறிய வேண்டும் என்றும் கூறினார்.

அடுத்த கருத்தரங்கு இம்மாதம் 31-ம் திகதி மாலை நடைபெறும்.

தகவல்:- எம். பி ஜி ஆர் எம்.

## 5-ஆம் ஆண்டு நினைவு



மண்ணகம்: 10-12-16 விண்ணகம்: 11-4-84

திரு. M. சூசைப்பிள்ளை
(சென் யோசப் கல்லூரி, திருமலை)

நற்பண்பின் உறைவிடமாய்,
நல்லாசிரியனுமாய்,
பொற்புடனே எமை வளர்த்த
புன்னகை வதனத் தந்தையே!
தித்திக்கும் உம்பாசம்,
திரும்பவும் நாம் பெறுவோமா?
நித்திய வாழ்வில் இணைந்திருக்க
இறைஞ்சுகின்றோம் இறையவனை!

அன்னாரின் ஆன்மசாந்திக்காக யாழ். அடைக்கல அன்னை ஆலயத்தில் 11-4-89 காலை 6-00 மணிக்கு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரன்.
இல. 5, மாட்டீன் ஒழுங்கை
யாழ்ப்பாணம். A/54

## 31-ம் நாள் கண்ணீர் அஞ்சலி

செல்வக் குழந்தை
ஆன் யூலியா பிகிருடோ
அமுதூட்டும்
அன்னையின் மடியில் — 15-1-89
அரவணைக்கும்
ஆண்டவர் அடியில் — 6 3-89

அழகுச்சிலையே ஆன் யூலியா
உன் நினைவு அகலாமல் — எம்
உயிரோடு நிற்குதம்மா —
கண்ணிலே நீர்த்துளிகள்
கடலாகி அலையுதம்மா
வான் வீட்டில் நீ சென்றாலும்
எம் மனதை(வீட்டை)
விட்டகல வில்லை —
உன் அழகு வதனம் காணாமல்
துடிக்கின்றோம்.

அன்புத்தந்தை
எஸ். றெட்ணசிங்கம்-பிகிருடோ
அன்புத் தாய்
திருமதி. பிறெக்ஸி-பிகிருடோ
மற்றும் அப்பம்மா, அம்மம்மா
குடும்பத்தினர்

## சிரிக்க சிந்திக்க

கணவன்:- உலகிலே ஆதாமும், ஏவாளும் தான் மிக மகிழ்ச்சியாக வாழ்ந்த ஜோடி என்பது தெரியுமா?

மனைவி:- எதற்காக அப்படிச் சொல்கிறீர்?

கணவன்:- அவர்களிருவருக்கும் மாமிமார் கிடையாது.

## 4 ஆம் வருட நினைவு அஞ்சலி



திருமதி மேரி பற்றிமா
புவிராசசிங்கம்
(முல்லைத்தீவு பிரபாகர் பார்மஸி முன்னாள் உரிமையாளர்)

தோற்றம்: 22 10-51 மறைவு: 07-04-85

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக 7-04-89 வெள்ளிக் கிழமை காலை 6-30 மணிக்கு முல்லைத்தீவு புனித பேதுரு வானவர் ஆலயத்திலும் அன்று மாலை 5-00 மணிக்கு சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்திலும் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கல் திருப்பலிகளில் பங்குபற்றி அன்னாரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இவரின் பிரிவால்துயருறும்
கணவர்:
J. சென் ஜோண் புவிராசசிங்கம்
பிள்ளைகள்:
சுதாகர், பிரபாகர், நிருபாகர்.
சகோதரி: றஞ்சினி
A/55

## 2-ம் வருட நினைவஞ்சலி

செபநாயகம் அருளம்மா

மலர்வு: 10-12-1935 உதிர்வு: 30-03-1987

அன்பின் இறைவா,

மரணம் வாழ்வின் முடிவல்ல அது முடிவில்லா நித்தியவாழ்வின் ஆரம்பமே என்று நீர் கூறிய வார்த்தையை விசுவசிக்கிறோம். இறைபதமடைந்த உமது அடியாள் செபநாயகம் அருளம்மாவின் ஆன்மாவிற்கு சமாதானத்தையும் நித்திய இளைப்பாற்றியையும் உமது சந்நிதானத்தில் அளித்தருள வேண்டுமென்று இரந்து வேண்டுகின்றோம்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிக்காக, மன்றாடும்படி உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் வேண்டுகிறோம்.

பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள்.
A/60


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதுகாவலன்
PATHUKAVALAN

## குறுக்கெழுத்துப் போட்டி இல: 9

(தானியேல் ஆகமம் அதிகாரம் 7-14)

விடைகளை அனுப்பவேண்டிய இறுதி நாள் 28-4-1989




**இடமிருந்து வலம்:**

(விடை அடங்கிய அதிகாரங்கள் அடைப்புக்குள் உள்ளன)

(1) இதோ, வானத்தின் ...... களும் மாபெருங்கடலைக் கொந்தளிக்கச்செய்தன (7)

(2) கப்பல்களில் உரோமையர்கள் வருவார்கள். ஆனால் அவனோ இப்படி திரும்பிப் போய் எதிராய் நடவடிக்கை எடுப்பான். (11)

(3) ஆயினும் அந்தக்...... இன்னும் திகைப்புற்றிருந்தேன; அதன் பொருள் எனக்கு விளங்கவில்லை (8)

(5) "அவனது இடத்தில் ஈனன் ஒருவன்.. ; அவனுக்கு அரச சிறப்பு தரப்படாது (11)

(7) மக்கள் சேனையில் ஒருவன்பெருவெள்ளம்போலத் திடீரெனப் பாய்ந்து வந்து மீண்டும் இவனின் கோட்டை வரைக்கும் போய்ப் போரிடுவான் (11-12)

(8) அவர்சொல்லும்போது, நான் தலை... தரையை நோக்கிக்கொண்டிருந்தேன் (10

(10) பேர்சியரின் மன்னனாகிய கீருசின் மூன்றும்......பல்தசார் என்று தானியேலுக்குப் பெயரிடப்பட்டிருந்தது.

(11) தானியேல் கண்ட காட்சி செம்மறிக்கடாவும் இதுவும் என்று கூறப்படுகிறது. (8)

**வலமிருந்து இடம்:**

(4) ...... னியர் இதை அறிந்து மிகவும் சினங்கொண்டு அரசனுக்கு விரோதமாய்க் கூட்டங்கூடி, "அரசர் யூதராகி விட்டார்; என்றனர். (13-14)

(6) கீருசின் மூன்றும் ஆட்சியாண்டு இதன் காலம் என்று கூறப்படுகின்றது. (10)

(9) நீண்ட ஆயுளுள்ளவர் முன் கோடானு கோடிப்பேர் நின்றபோது இதுவே நீதிவழங்க அமர்ந்தது. (7)

**மேலிருந்து கீழ்:**

(1) இரவின் காட்சியில் இதோ ......... அச்சத்திற்குரியதாயும் வியப்பூட்டத்தக்கதாயும் மிகுந்த வலிமையுள்ளதாயும் இருக்கக் கண்டேன். (7)

(4) பெரிய கொம்பு முறிந்த இடத்தில் வேறு நான்கு கொம்புகள் முளைத்து வானத்தின் நான்கு .. ... நோக்கி வளர்ந்தன. (8-9)

பி. கு: சதுரமிடப்பட்ட படிவங்கள் மட்டுமே செல்லுபடியாகும்.

★ பசாம் குறுக்கெழுத்துப் போட்டியில் பங்குபற்றிய அனைவருக்கும் பாராட்டுக்களைத் தெரிவிப்பதோடு, உயிர்த்த கிறிஸ்துவின் ஆசீர்களையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அடுத்த போட்டி 5. 5. 89 இல் வெளிவரும்.

பரிசு ரூபா 25/=

## மன்னார் மறைவட்டத்தில் பணிபுரியும் குருக்கள், துறவிகளுக்கான கருத்தரங்கு

சென்ற மாதம் 20-ம 21-ம திகதிகளில் மன்னார் மறைவட்டத்தில் பணிபுரியும் குருக்கள் துறவிகளுக்கு மன்னார் ஆயர் ஆலயத்தில் ஒரு கருத்தரங்கு நடைபெற்றது. ஆயர் உட்பட 35 பேர் பங்குபற்றினார். அருள்திரு. ஒஸ்வால்ட் கோமஸ் அ. ம. தி. அடிகளார் இக்கருத்தரங்கை நடாத்தினார்கள. 20-ம திகதி மாலை 4-30 மணியளவில் ஆரம்பமான இக்கருத்தரங்கு ஆவலுடன் தவக்காலக கல்வித திட்டத்தை ஒட்டியதாக அமைந்திருந்தது. 21-ம் திகதி அன்று காலை 8-30 மணியளவில ஆரம்பமான கருத்தரங்கு "ஏழைகள் சார்பாக நாம கொண்டிருக்க வேண்டிய அக்கறை" என்பதை மையமாக வைத்து நடாத்தப்பட்டது. சிறு குழுக்களாகப் பிரிந்து சென்று கருத்துக்கள் பரிமாறப்பட்டதுடன், எதிர்காலத்தில் நாம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் கலந்தாலோசிக்கப்பட்டது. நடைபெற்று முடிந்த இக்கருத்தரங்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்ததையிட்டு பங்குபற்றியோர் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

## ஆசிய துறவற சிரேஷ்டர்களுக்கு மறைப் பயிற்சி

மறைபரப்பு நோக்கான ஒரு மாத பயிற்சித் திட்டத்திற்காக், திருவார்த்தை சபை உட்பட, முப்பது குருமட சிரேஷ்டர்கள் பூனாவிலுள்ள இஷ்வாணி கேந்திராவில் ஒன்று கூடினர்.

இந்தியா, இந்தோனேசியா, தாயவான், தென்கொரியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகளுடன் அமெரிக்கா, ஆபிரிக்கா, நியூகினி ஆகிய இடங்களிலிருந்து சில பார்வையாளரும் அங்கு வந்திருந்தனர்.

திருவார்த்தை சபையினர் இத்தகைய ஒரு பயிற்சியை மேற்கொண்டது இதுவே முதற் தடவையாகும். சபையின் மறைபரப்பும் ஆன்மீகத்துக்கும் அருங்கொடைக்கும் ஒரு உந்துதலை அளிப்பதே இதன் நோக்கமாகும்.

## சாதிப் பாகுபாடு ஒழியவேண்டும்

"இந்தியக் கிறிஸ்தவ மக்கள் தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த தமது சகோதரரின் சமத்துவத்தை வலியுறுத்த வேண்டும்" என இந்திய ஆயர் பேரவைத் தலைவரான திருவனந்தபுரம் பேராயர் மார் கிறகோறியோஸ் பத்திரிகையாளர்களுக்குக் கூறினார்.

"அரசாங்கம் ஏனைய மதங்களைச் சார்ந்த தாழ்த்தப்பட்டோருக்கு வழங்கும் சலுகைகளை கிறிஸ்தவர்களுக்கும் அளிக்கவேண்டும் என வற்புறுத்தும் அதேவேளையில் திருச்சபையினுள் சாதிப்பாகுபாடு ஒழிக்கப்பட வேண்டும்" எனவும் எடுத்துக் கூறினர்.

"உயர்குலத்தவர் எனத் தம்மைக் கூறிக்கொள்ளும் கிறிஸ்தவர்கள் தாழ்த்தப்பட்டோரை சமத்துவமாக நடத்துவதில்லை. மேனாட்டவர் அவர்களுடன் சாதாரணமாகப் பழகும்போது உயர்குல இந்தியர்கள் அவர்களைத் தமது வீட்டிற்குள் பிரவேசிக்க அனுமதிப்பதில்லை. அகில இந்திய கத்தோலிக்க சங்கம் இப்பிரச்சினைக்கு முதலிடம் அளிக்க வேண்டும்" என்றார் ஆயர்.



தேமதுரக் காவியம்

## தேம்பாவணி

எதிர்வரும் ஞாயிறு (2.4-89) திருமறைக் கலாமன்றத்தினரால், யாழ் மறைக்கல்வி நடுநிலையத்தில் நடத்தப்படும் தேம்பாவணி விழாவை ஒட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

—புலவர் நீ. மரியசேவியர்

இல்லற இலக்கணத்தின்
இனிமையை இணைத்தும்
துறவற இலக்கியத்தின்
தூய்மையைத் துய்த்தும்
ஈரறமும் ஓரறமாய்ப்
பொருந்த எழுந்த
இன்தமிழ்க் காவியமே.
தேம்பாவணி

"தேம்பாவணி" என்றொரு காவியம் உண்டோ? எனக் கேட்பவர் பலர். தேம்பாவணி என்பதன் பொருள் என்ன என்று கேள்விக்கு விடை தேடுபவர் வேறு சிலர். தேம்பாவணி என்பது ஒரு கிறிஸ்தவ நூலா? என்ற ஐயத்தை எழுப்புபவர்கள் ஒரு சிலர். தேம்பாவணி என்பது ஒரு தமிழ்க் காவியம். தேம்பாவணி என்றால் (தேம்பா+அணி) வாடாத மாலை என்று பொருள்படும். (தேன் + பா + அணி = தேன் போன்ற பாக்களின் வரிசை என்னும் பொருள் படுத்துவர்) அதில் பெருங்காவியங்களுக்கு இருக்கவேண்டிய சிறப்பு இலக்கணங்கள் அத்தனையும் உண்டு. இயேசுவின் வளர்ப்புத்தந்தையாகிய சூசை (=வளன்) என்பவரைக் காவியநாயகனாகக் கொண்ட தேம்பாவணி தமிழ் இலக்கியத்தில் ஒப்பற்ற ஒரு நூல் என்றால் காரணம் இல்லாமல் இல்லை. அதை இயற்றியவர் வீரமாமுனிவர் அல்லது தைரியநாதர் என்ற இத்தாலிய கத்தோலிக்க குரவர்; அவர் தான் தமிழ் எழுத்துக்களை சீர்ப்படுத்தியவர், தமிழில் முதல் அகராதியை ஆக்கியவர்; இலக்கிய தமிழ உரை நடையின் தந்தை எனவும் போற்றப்படுபவர்.

**சிறப்புக்கள்**

முதன்முதல் விருத்தப்பா சிறப்புப்பெற்றது சீவகசிந்தாமணி ஆசிரியர் திருத்தக்க தேவராலேயே என்றால், முதன் முதல் சந்தம் சிறப்புப்பெற்றது பாரதக் கதையின் வில்லிப்புத்தூர் ஆழ்வாராலேயே என்றால், இவை இரண்டுமே வீரமாமுனிவரின் தேம்பாவணியினால் சிறப்புப்பெற்றன என்று கூறுதல் மிகையாகாது. சீவக சிந்தாமணி, கம்பராமாயணம், சிலப்பதிகாரம், திருக்குறள், நைடதம், நளவெண்பா, நாலடியார், இனியவை நாற்பது, இன்னா நாற்பது போன்ற நூற்புலமையும் வேர்ஜில், தாந்தே, தாசோ, முதலிய மேல்நாட்டுக் கவிஞரின் நூற் புலமையும் அதில் பயன்படுத்தப்பட்டுள்ள தால் கீழைத்தேசக் கலையும் மேலைத்தேசக் கலையும் கலக்கும ஏரி தான் தேம்பாவணி எனவும் கூறலாம். (தொடரும்)

## அவர் செயலாற்றுகிறார்..

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

படுபவர், கோழைத்தனம் கொண்டவர், விசுவாசத் தளர்ச்சி கொண்டவர். மறுதலித்தவர், ஒரு சாதாரண மானவர் ஆயினும் அவரது தேர்வும், உருவாக்கமும் முற்றிலும் இயேசுவினுடையதே. இயேசு அவரை உறுதிப்படுத்தினார், திருத்தினார், மன்னித்தார், கடிந்தும் கொண்டார், இறுதியாகப் பொறுப்பும், வலிமையும் வழங்கினார்.

இராயப்பரில் மிளிர்ந்த தலைமைத்துவத்திற்கு அப்போஸ்தலர் பணியின் ஒவ்வொரு அத்தியாயமும் சான்று பகரும். காரணம் இராயப்பரில் செயல்பட்டது உயிர்த்த கிறிஸ்துவே.

இன்று திருச்சபை அப்படி... இப்படி... என்று முதலைக் கண்ணீர் விடாமல். நானும் நீங்களும் தான் திருச்சபை, இயேசு எமது வலப்புறம் இருந்து செயலாற்ற எம் விசுவாசத்தைப் புதுப்பிப்போம் அவரில் இயக்கம் பெறுவோம்

எமது பலவீனத்தில் இயேசு பலம் அடைகிறார். இன்றும் இயேசு என்னில் செயலாற்றுகிறார். உண்மைதானா?

சுவாமி ஜீவா போல் அ. ம. தி.

## பசாம் குறுக்கெழுத்துப் போட்டி

சரியான விடைகள்:-

மேலிருந்து கீழ்:

2. ஆத்தும குடிகளை
3 தம்பிரான்.
4. பூமியே.
5. சாவு.
7. துரையன்
8. ஐயோ.
11. நெருப்பு.
13. மிருது.
16. கினிய.
17. சோரன்
19. கசை.

தனியனா

12. நா.

இடமிருந்து வலம்:

1. எக்சே ஓமோ.
4. செம்பரத்தம் பூ
6. பிலாத்து.
9 தீயாகு.
10. முன.
14. பேதுரு.
15. நற்கருணை.
18. தூணிக்கை
20 மாங்கிஷம்.
21. மூகன்.

சரியானவிடை எழுதியோர் விபரம்:

(1) அ. வில்டா மேரி சிராய்வா, 3 ஆம் வட்டாரம் பேசாலை

(2) அ. றெமிஜியஸ் சிராய்வா, பணங்கட்டுக் கொட்டு மன்னார்.

(3) ம. மேரி விறிசிற்ரு, தும்பளை வீதி, துப்பளை.

(4) அ எட்விஸ் சாந்தினி, லூர்துமாதா கோவிலடி துப்பளை.

பரிசுபெறும் அதிஷ்டசாலி
ம. மேரி விறிசிற்ரு,
தும்பளை வீதி,
தும்பளை பருத்தித்துறை

இப்பத்திரிகை திரு. நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1989-ம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
பதிவு இல: QB / 1001/58/81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்